



நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -121





## தமிழினத்தின் விடிவிற்காக போராடிய மாவீரர்களுக்கு நினைவுத்தூபி அமைக்க த.தே.கூட்டமைப்பு அரசை வலியுறுத்தவேண்டும்

## பாராளுமன்றத்தேர்தல் நிறைவுபெற்றதும் தமிழ்மக்களுக்கான சலுகைகள் அனைத்தும்...?





## நிறைவேற்றதிகார ஆட்சிமுறையும், அதன் சாதக பாதக தன்மைகளும்




No : 158, Bazaar Street, Vavuniya
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.
familystyle158@gmail.com

# தமிழின விடிவிற்காக போராடிய மாவீரர்களுக்கு நினைவுத்தூபி அமைக்க த.தே.கூட்டமைப்பு அரசை வலியுறுத்தவேண்டும்



ஒரு இனத்தின் விடுதலைக்காக தன்னுயிரை தியாகம் செய்த போராளிகளுக்கு அகவணக்கம் செலுத்துவதென்பதுதமிழ்மக்களின்தலையாய கடமையாகும். இந்தப்போராட்டம் உருவாவதற்குரிய காரணம் என்ன? இதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் யார்? என்பதைப்பற்றி பல்வேறு கட்டுரைகளில் நாம் பிரசுரித்திருக்கின்றோம். இவ்விடயங்கள் தொடர்பாக ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ரோஹன விஜயவீர தலைமையிலான ஜே.வி.பி கட்சியினர் ஆரம்பகாலத்தில் சிங்கள கொட்டி என அழைக்கப்பட்டனர். இவர்கள் பெரும்பான்மை இனத்தினைச் சார்ந்தவர்கள் என்றவகையில் அரசிற்கெதிராக போர்க்கொடி ஏந்தியதன் காரணமாக, UNP அரசினால் கொடூரமான முறையில் இவர்கள் கொலைசெய்யப்பட்டனர்.

இவர்களுக்காக பூசா சிறைமுகாமும் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டது. இதில் பல்வேறு சிங்கள இளைஞர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். டயர், தார் என்பவற்றின் மூலம் எரிக்கப்பட்டனர். ஜே.வி.பி கலவரம் இடம்பெற்று 30வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இவர்கள் இன்று பாராளுமன்றில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளாக இருக்கின்றனர். சிங்கள மக்களுள் பாமர இனத்திற்காக குரல்கொடுத்தவர்கள் இந்த ஜே.வி.பி அமைப்பினர். அதுமட்டுமல்லாது இவர்கள் தற்பொழுது எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரும் அளவிற்கு இவர்களது அரசியல் நகர்வுகள் இடம்பெறுகின்றது. ஜே.வி.பி கட்சியினர் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பல துண்டங்களாக உடைக்கப்பட்டனர். அதில் மஹிந்த ராஜபக்ஷவோடு இணைந்துகொண்டவர் விமல் வீரவன்ச. இன்று அனுரகுமார திசாநாயக்கா கட்சியினைக்கொண்டு நடத்துகின்றார்.

இக்கட்சியிலிருந்த டி.என்.சில்வா பிரிந்துசென்று தனித்து செயற்படுகின்றார். ஜே.வி.பி கட்சியின் தலைவராக ரோஹண விஜய்வீர செயற்பட்ட காலத்தில் அவர் மிகக்கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இலங்கை தேசத்தில் இவ்வாறு ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்க, வடகிழக்கினைப்பொறுத்தவரை தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதில் மலையகமும் இணைக்கப்பட்டிருக்கின்றது. மலையகத்தினை பிரதிபலிக்கும் வகையில் ஈரோஸ் இயக்கமானது அதன் தலைவர் பாலகுமாருடன் அப்போது செயற்பட்டுவந்தது.

இக்காலகட்டத்தில் ஈரோஸ், ரெலோ, புளொட், விடுதலைப்புலிகள்என்ற நான்கு இயக்கங்களும் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் போராட்டத்தினை முன்னெடுத்து கடந்த 30 வருட காலங்களுக்கு மேலாக கொடிகட்டிப்பறந்தன. இவ்வியக்கங்களுள் விடுதலைப்புலிகள் இயக்கம் முதன்மை பெறுகின்றனர். விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் இல்லை என சர்வதேசம் அங்கீகரித்ததன் பின்னர், 07 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் 13 உள்ளூர் பேச்சுக்களுமாக இடம்பெற்றுள்ளன. இதற்கு நோர்வே தலைமைதாங்கியது.

ஆனால் அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியிலேயே நிறைவடைந்தன. விடுதலைப்புலிகளது இறுக்கமான கட்டமைப்பு பல்வேறு பரிணாம வளர்ச்சியினைக்கொண்டிருந்தது. குறிப்பாக வடகிழக்குப்பகுதியில் அம்மாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் விடுதலைப்புலிகளது செயற்பாடுகள் சிறந்த கட்டமைப்புடன் காணப்பட்டது. அவையாவன: சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி, ஜெயந்தன் படையணி, இம்ரான் பாண்டியன் படையணி, யாழ் செல்லும் படையணி, புலனாய்வுத்துறை தாக்குதல் படையணி, சோதியா படையணி, அன்பரசி படையணி, மாலதி படையணி, சிறுத்தை படையணி, தரைக்கரும்புலிகள் படையணி, பொன்னம்மான் கண்ணிவெடி பிரிவு, கிட்டு பீரங்கி படையணி, விக்ரர் விசேட கவச எதிர்ப்பு படையணி, லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி, மகளிர் அரசியல்துறை தாக்குதல் படையணி, இம்ரான் பாண்டியன் உந்துருளி அணி, எல்லை படை, துணைப்படை.

**கடற்புலிகள்**

சாள்ஸ் படையணி, அங்கையற் கண்ணி நீரடி நீச்சல் பிரிவு (மகளிர்), நிறோயன் நீரடி நீச்சல் பிரிவு (ஆடவர்), ஈரூடக தாக்குதல் படையணி, கடற்படை படகு கட்டுமான பிரிவு, கடற்கரும்புலிகள் அணி, கடற்சிறுத்தை படையணி.

**வான்புலிகள்**

1.ராதா வான் காப்பு படையணி

2.தமிழீழ வான்புலிகள்.

அறிவியல் வெடிபொருள் தொழில்நுட்ப பிரிவு, கணனி தொழில்நுட்ப பிரிவு, இலத்திரனியல் தொழில்நுட்ப பிரிவு, போர்கருவி தொழிற்சாலை, தமிழீழ இராணுவ விஞ்ஞான கல்லூரி.

**அரசியல் 'துறை**

பரப்புரை பிரிவு, தமிழீழ பொறியியல் துறை, தமிழீழ விளையாட்டு துறை, விடுதலைப்புலிகளின் ஆங்கில கல்லூரி, திரைப்படபுத்தக மொழிபெயர்ப்பு துறை, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு, தமிழீழ கல்வி மேம்பாட்டு கழகம், தமிழீழ கலை பண்பாட்டு கழகம், விடுதலைப்புலிகளின் சுகாதாரப் பிரிவு, சூழல் நல்லாட்சி ஆணையம், தமிழீழ வனவள பாதுகாப்பு பிரிவு, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், பொருண்மிய மதியுரையகம், தமிழீழகாலநிலை அவதானிப்பு நிலையம், ஒளிக்கலைப்பிரிவு, தமிழீழ தேசிய தொலைக்காட்சி, நிதர்சனம், ஒளி வீச்சு ஒலிபரப்பு, புலிகளின் குரல் பத்திரிகை, புலிகளின் குரல் தமிழீழ வானொலி, ஈழநாதம், சுதந்திரப் பறவைகள், விடுதலைப்புலிகள் ஏடு, மருத்துவ பிரிவு, திலீபன் மருத்துவ சேவை.

**தமிழீழ காவல்துறை**

குற்றத்தடுப்புப்பிரிவு, விசாரணை பிரிவு, வீதி போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு, தமிழீழ காவல்துறை தாக்குதல் படையணி.

**தமிழீழ நீதித்துறை**

தமிழீழ நீதிமன்றம், சட்ட ஆக்க கழகம், தமிழீழ சட்டக்கல்லூரி.

*தமிழீழ புலனாய்வுத் துறை

*புலிகளின் உள்கட்டுமான பாதுகாப்புக்கான உளவுப்பிரிவு.

**நிதித்துறை**

தமிழீழ நிர்வாக நிதிபிரிவு, தமிழீழ வழங்கல் பிரிவு, தமிழீழ வங்கி, கொள்முதல் பிரிவு

*தமிழீழ வெளியுறவுப்பிரிவு.

*தமிழீழ போக்குவரத்து கழகம் இதைவிட இரகசியமான சில படைகளும் உண்டு. இவ்வாறான கட்டமைப்புக்களைக்கொண்டிருந்தது. 2004ம் ஆண்டுகளுடன் பேச்சுவார்த்தைகளில் முறுகல்நிலை ஏற்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் பிரதேசங்கள் எங்கும் சிறுசிறு போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது, விடுதலைப்புலிகள் மஹிந்த ராஜபக்ஷவினை ஆதரிக்கக்கோரியதன் விளைவாகவே அவர் பாரிய வெற்றியினைத் தக்கவைத்துக்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு 105 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி 82 ஆசனங்களையும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 22 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது. ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற கட்சிகள் மஹிந்த ராஜபக்ஷவினையே ஆதரித்தன. இவ்வாறிருக்கும் நிலையில் தமிழர் பிரதேசம் எங்கும் ஒரு சுமுகமான தீர்வுகள் எட்டப்படுவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் காணப்பட்டது. ஆனால் இலங்கையரசு அதனை ஏற்றுக்கொண்டதாக இல்லை. நோர்வேயின் மத்தியஸ்தமும் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கைத்தீவில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் கரங்களை எட்டிப்பிடித்த சந்திரிக்கா குமாரதுங்கவும், அன்றைய வெளிவிவகார அமைச்சராகவிருந்த லக்ஷ்மன் கதிர்காமரும், சீனாவின் கரங்களை இறுகப்பிடித்த மஹிந்தவும் இணைந்து, விடுதலைப்புலிகளைபயங்கரவாதிகள்என சர்வதேச மட்டத்தில் முத்திரை குத்தினர். இக்காலத்தின்பொழுது அரசியல் ரீதியாக தமிழ்ச்செல்வன் குழுவினர் 37 நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டர். ஆனால் அனைத்துநாடுகளுமேவிடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதிகள் என்ற ரீதியிலேயே நோக்கின. இலங்கையில் இனவழிப்பு இடம்பெற்றதற்கெதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் போராடினார்கள் என்பது இலங்கை அரசினால் இருட்டடிப்புச்செய்யப்பட்டது. தமிழரை வைத்தே தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டது.

இதில் முக்கியமாக கருணா-பிரபாவினது பிரிவினைக் குறிப்பிடலாம். படிப்படியாக வளர்ச்சி கண்ட விடுதலைப்புலிகளின் போராட்டமானது அனைத்துலக நாடுகளினாலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. குறிப்பாக அமெரிக்கா, சீனா, இந்தியா, போன்ற நாடுகளின் தேசிய பாதுகாப்பிற்கு விடுதலைப்புலிகளினால் ஆபத்து நேரிடலாம் என்கின்ற காரணத்தினால் பிரபாகரன் தலைமையிலான போராட்டத்தினை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இலங்கைக்கு தமது உதவிகளை வழங்கி பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்களை கொன்றழித்தனர். ஆனால் 2009ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர், விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என சித்தரித்த நாடுகளும், குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, பல மனித உரிமை அமைப்புக்கள் தமிழினம், விடுதலைப்புலிகளின் போராட்டம் பற்றியும் எடுத்துக்கூறமுன்வந்தன. உக்கிரமான யுத்தத்தினால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொலைசெய்யப்பட்டபோது கண்மூடிக்கொண்டிருந்த இந்த சர்வதேச அமைப்புக்கள் இன்று இவ்விடயம் தொடர்பாகவும், இராணுவ அதிகாரங்களுக்கு எதிராகவும் சர்வவேச நீதிமன்றத்தின் முன் இப்பிரச்சினைகள் விசாரணை செய்யப்படவேண்டும் எனக்கூறுவது வேடிக்கையானதாகும்.

இந்தியா நினைத்திருந்தால் யுத்தத்தினை நிறுத்தியிருக்கமுடியும். இலட்சக்கணக்கான மக்கள் அழிவினை சந்தித்திருக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. ஒரு நாட்டினை வழிநடத்திச்செல்லும் அளவிற்கு விடுதலைப்புலிகளது கட்டமைப்புகள் அமைந்திருந்தன. அத்தோடு கடல், வான், தரை என முப்படைகளையும் கொண்டிருந்தனர். இவ்வாறு இருந்த விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும், அப்பாவிப் பொதுமக்களையும் ஈவிரக்கமின்றி சர்வதேச நாடுகள் இலங்கை அரசுடன் இணைந்து கொன்றனர் என்பதுவே உண்மையான விடயம். இன்று வடகிழக்கில் அவர்களுக்கான ஒரு நினைவுத் தூபியினைக்கூட அமைக்க இயலாத நிலைக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், அஹிம்சை வழியில் தோன்றிய தமிழரசுக் கட்சியும், வடகிழக்கு மாகாண சபைகளும், இன்னும் தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்கும் தமிழ்க்கட்சிகளும் இவ்விடயம் தொடர்பில் நித்திரை கொள்கின்றார்கள் என்றுதான் கூறவேண்டும். தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். சுதந்திரக்காற்றினை சுவாசிக்கவேண்டும் என்பதற்காக தம்மையே மனிதவெடிகுண்டுகளாக்கி எதிரிக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய கரும்புலிகளின் தியாகங்களும், இலங்கை அரசினால் பறிக்கப்பட்ட தமிழர் நிலப்பரப்பினை மீட்கும் போராட்டத்திலும், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாட்டில் உறுதிகொண்டவர்களுக்காக ஒரு நினைவுத்தூபியினை அமைப்பதில் தவறேதுமில்லை.

அன்று ஆயுதமேந்தி சிங்கள இனத்திற்கெதிராக அவ்வினத்தினைச்சார்ந்த ஜே.வி.பியினர் வன்முறைகளை கட்டவீழ்த்து ஆட்சியைக்கைப்பற்றும் நோக்கில் செயற்பட்டனர். பின்னர் அவ்வமைப்புக்களைச்சார்ந்த முக்கிய உறுப்பினர்கள் அழிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அரசியலில் இவர்கள் கால்பதித்துள்ளனர். பாராளுமன்றிலும் இவர்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில்தான் விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் மக்களின் தியாகங்களுக்காக வடகிழக்கில் எங்கோ ஒரு இடத்தில் நினைவுத் தூபியினை அமைக்கும் செயற்பாடுகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், வடகிழக்கு மாகாணசபைகளும் இணைந்து அதனை நெறிப்படுத்தவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை இவர்கள் மேற்கொள்ளாதவிடத்து பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரிப்பதற்காகவும், வயிற்றுப்பிழைப்புகளுக்குமாகவே பாராளுமன்றம் சென்றார்கள் எனக்கருதவேண்டும்.

இறுதி யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களும், தமிழினத்தின் விடுதலைக்காக தற்பொழுது குரல்கொடுக்கும் கட்சிகளும் வாய்கட்டப்பட்டவர்களாக அன்று ஏன் இருந்தார்கள் எனவும் கேள்வியெழுப்பப்படுகின்றது. இந்தியாவில் கலைஞர் கருணாநிதி கூட யுத்தத்தினை நிறுத்துமாறு உண்ணாவிரதம் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது இந்தியாவின் தமிழ்த்தேசியவாதிகள் தீக்குளித்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டும். யாரேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உண்ணாநோன்பு இருந்தார்களா? அல்லது ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழின அடக்குமுறைக்கெதிராக உண்ணாநோன்பிருந்து மக்களைக்காப்பாற்றியிருக்கமுடியும். இவர்கள் மக்களின் நலனுக்காக உழைக்கின்றார்களா? என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றது.

ஆனால் இப்பொழுது யுத்தம் இல்லை. நிறைவேற்றதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையும் நீக்கப்பட்டு, 19வது திருத்தச்சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்மக்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வினைக்காண்பதற்கான சமிக்ஞைகளும் தென்பட ஆரம்பித்திருக்கின்றன.

08ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தேர்தல் பிச்சையெடுக்க அரசியல் வாதிகள் வீடு வீடாக வருவார்கள்

அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க ஒருசில அரசியல்வாதிகள், ஆசனங்களை தக்கவைத்துக்கொள்ள ஒருசில அரசியல்வாதிகள் என போலி வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு, தேர்தல்காலங்களில் வீடு வீடாக அரசியல்வாதிகள் தமது வாக்குகளுக்காக வருகைதரும் விடயத்தினை தேர்தல் திருவிழா என மக்கள் கூறுகிறார்கள். 10 வருடங்களுக்கு முன் கிறவல் கொட்டப்பட்டு இன்னமும் செப்பனிடப்படாத வீதிகளை பார்வையிட தற்பொழுதிலிருந்தே நடைபவனிமேற்கொள்ள களத்தில் இறங்கிவிட்டார்கள். தேர்தல் என்பது சுயலாப அரசியல், தேசிய அரசியல் என்ற இருவிடயங்களை உள்ளடக்குகின்றது.

தமிழ் மக்களைப்பொறுத்தவரை இன அரசியலின் விடுதலைக்கான தேர்தலே இதுவாகும். ஏமாற்றப்பட்டுகொண்டுவந்த தமிழ் சமுதாயம் தொடர்ந்தும் ஏமாற்றப்படவேண்டும் என்பதையே அரசு விரும்புகின்றது. நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்குகளை சேகரிக்க வீடு வீடாக அரசியல்வாதிகள் வருவது வழமையானதொன்று. குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளைப்பொறுத்தவரை த.தே.கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும். மாறாக அரசிற்கோ அல்லது UNP, ஜே.வி.பியினருக்கு வாக்களித்தால் தமிழ் மக்களுக்கான தனித்துவத்தினை சர்வதேச மட்டத்தில் வெளிக்காட்ட இயலாமல்போகும். UNP தனது கட்சியினை பலப்படுத்துவதற்காக தமிழ் மக்களது வாக்குகளை சேகரித்துக்கொள்ளும் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினைப் பொறுத்தவரை ஆட்சியமைத்துக் கொள்வதென்பது கடினமானதொரு விடயம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் UNP தனித்துப்போட்டியிட்டாலும தேசிய அரசாங்கமே அமைக்கப்படும். ஆனால் இங்கு பெரும்பான்மை பலத்தினை பிரயோகிப்பதற்கு கட்சிகள் ஒவ்வொன்றும் தமது பலத்தினை காட்டவேண்டிய நிலை இருக்கின்றது. வடகிழக்கினைப்பொறுத்தவரை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக செயற்பட்டுவருகின்ற த.தே.கூட்டமைப்பு தமது தனித்துவத்தினை வெளிப்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈரோஸ் என்ற பாகுபாடுகளின்றி ஒருமித்து செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும். இதனைக்கருத்திற்கொண்டு UNP தமிழ்மக்களுடைய கட்டமைப்புக்களை சீர்குலைத்து. வாக்குகளை தம்பக்கம் திசைதிருப்ப முயற்சிகளை மேற்கொள்ளும். கடந்த வடமாகாணசபைத் தேர்தல் காலங்களில் கூட UNP தமது காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருந்தமையும் சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

த.தே.கூட்டமைப்பிடம் இருக்கக்கூடிய துரும்புகள் இனப்படுகொலை, தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்வைத்தே இவர்களது பிரச்சாரங்கள் அமையப்பெறும். விடுதலைப்புலிகளது பெயர்களை உச்சரிக்கவேண்டிய சூழ்நிலை அவசியமாக காணப்படும். தமிழ் மக்களாகிய நாம் ஒரு விடயத்தினை புரிந்துகொள்ளவேண்டும். தமிழினத்தின் ஒற்றுமை என்பதனை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் த.தே.கூட்டமைப்பிடம் கையளித்துள்ளார். ஆகவே இதனை உடைத்துவெளியேறும் எந்தக்கட்சியும் துரோகிகள் என்றே கருதப்படவேண்டும். தமிழரசுக்கட்சி, ஆயுதக்கட்சிகளை தனித்துபோட்டியிடுங்கள். உங்களது பலத்தினைக் காட்டுங்கள் எனக்கூறுவார்களாகவிருந்தால் தமிழரசுக்கட்சியும் துரோகியே. தேர்தல் நடைபெறவிருக்கிறது என்பது உறுதியான விடயம். கட்சி முரண்பாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு. ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். எக்காலகட்டத்திலும் தமிழ்மக்களுடைய பலம் ஒற்றுமையே.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அல்லது UNP கட்சிக்கோ தமிழ் மக்கள் வாக்களித்தார்களாகவிருந்தால், யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக்கொண்டதற்கு அது சமனாகும். ஆகவே வாக்குப்பொறுக்கும் ஒரு கூட்டத்தார் வீடுதேடி வருவார்கள். அவர்கள் யார் என்பதை பகுத்தறிந்து, த.தே.கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்துவதே தமிழ்மக்களுடைய போராட்டத்தையும், போராளிகளின் தியாகங்களையும் மதிக்கும் ஒரு செயலாக அமையப்பெறும்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



**47**

'முதன் முதலாக நான் பங்குபற்றிய மிகப்பெரிய வெற்றிச் சமரில் தான்' என்று 1990இல் யாழ் கோட்டையை நாம் கைப்பற்றிய சண்டையைப்பற்றி மார்தட்டுகின்ற சாந்தகுமாரி படிப்பறிவைவிடப் பட்டறிவாலேயே அதிகம் சாதித்தவர். கோட்டை, பலாலி முன்னரங்கப் பாதுகாப்புப் பணி, ஆகாயக் கடல் வெளிச்சமர், பலவேகய–02 என்று விரிந்த கள அனுபவங்களைப் பெற்றபின், கண்ணிவெடிப் பிரிவில் இணைக்கப்பட்டார். வேவு அணியோடு இணைந்து செயற்பட்ட களங்களில் கண்ணிகளை விதைப்பதும், படையினரின் கண்ணிகளை அகற்றுவதுமாக விளையாட்டுப்போல இவரின் பணி தொடர்ந்தது.

வன்னியில் படையினரின் வெற்றி நிச்சயம் நடவடிக்கைக்காலத்திலும் கண்ணிவெடிகளோடே களங்களில் நின்றார். கண்ணிகளை விதைப்பதற்காகக் கிடங்குகளைத் தோண்டித்தோண்டியே கொப்புளங்கள் உண்டாகிக் காய்த்துப்போன கைகளில் மீண்டும் அலவாங்கைச் சுமந்தபடி கனமெங்கும் உலவிய இவரை சூரியகலா–02 அதிகாரிகள் கல்லூரியில் பயில்வதற்கெனத் தெரிவுசெய்தார் விதுஷா. மிகச்சிறந்த குறிவல்லுநராக விளங்கிய சாந்தகுமாரி 1997 இல் எமது கொம்பனிகளுக்கிடையே நடந்த சூட்டுப்போட்டிகளில் அதிகளவு பரிசுகளைத் தலைவர் அவர்களின் கையாலே பெற்றுக்கொண்டார். 1999 ஆரம்பத்தில் வடபோர்முனைக் கட்டளைப் பணியகத்தால் நடாத்தப்பட்ட சூட்டுப்போட்டியிலும் சிறந்த பரிசுகளைத் தட்டிக்கொண்டார்.

சூரியகலா–02 பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறியபின் பிளாட்டூன் கட்டளையதிகாரியாகப் பணியாற்றிய சாந்தகுமாரி இப்போது கொம்பனியின் கட்டளையதிகாரியாக உயர்ந்திருந்தாலும் அவருடைய எளிமையும், எல்லோரையுமே விருந்தோம்பும் உயர்ந்த குணமும் எப்போதும்போல் இப்போதும் அவரிடமிருந்தன. சவாலான வேலைகளைப் பொறுப்பெடுக்கும் துணிவு அவரிடமிருந்தது. எனவே ஒரு சிறு குழுவைக் கூட்டிக்கொண்டு படையினரின் முன்னரங்கநிலைகளைத் தேடவெனப் போய்விட்டார். திரும்பிப் பார்த்த திசைகளெல்லாம் தாம் வந்த திசைகள்போலவே அவர்களுக்குத் தோற்றம் காட்டின. சரியான பாதையால் திரும்பி வரமுடியாமல், பறட்டைக் காட்டிடையே தாகத்துடன் அலைந்து திரிந்து ஐந்து நாட்களின் பின் பாப்பாமோட்டை பள்ளமடு வீதியில் அவர்கள் ஏறியது ஒரு தனிக்கதை. எமது காப்பரண்களைக் கடந்து முன்புறமாக வேவு நடவடிக்கைக்குப் போனவர்கள் திரும்பிவரும்போது எமக்குப் பின்புறமுள்ள நெடுஞ்சாலையால் வந்து சேர்ந்திருந்தனர்.

இதன் பின்னர் மன்னாரின் காடுகளறிந்த, திசைகளையறிந்த மூத்த வழிகாட்டிகள் இருவரை எமது வேவு நடவடிக்கைகளுக்கு உதவியாக மன்னார் மாவட்டத் தாக்குதலணி எமக்கு அறிமுகம் செய்துவைத்தது. அவர்கள் வந்தபின்னர், அவர்களில் ஒருவரோடு மேஜர் இளம்பிறை போய்த் தேர்ந்தெடுத்த இலக்கு, உயிலங்குளத்திலிருந்த படையினரின் சோதனைச் சாவடி. அப்போது வடக்குக்கும் தெற்குக்குமான போக்குவரத்துப் பாதையாக உயிலங்குளம் இருந்தது.

வன்னியில் இருந்து புறப்படும் ஒருவர் மன்னார் போய், வவுனியா போய்த்தான் வேறெங்கும் போகலாம். மக்களைச் சோதனைசெய்து உள்ளே அனுமதிக்கும் சாவடிநோக்கி படையினரின் பதினைந்து பேர்கொண்ட தேடுதல் அணி ஒன்று அதிகாலையில் வரும். அதுவே இளம்பிறை தேர்ந்தெடுத்த இலக்கு. கொம்பனிப் பொறுப்பாளர் தர்ஷா, பிளாட்டூன் பொறுப்பாளர் இளம்பிறை, கூடவே அமுதா, மன்னார் மாவட்டப் போராளிகளான லெப். கேணல் தில்லை, மேஜர் ஐயன், எங்களுடைய இன்னும் சிலர் என்று ஒரு அணி போய்ப்பதுங்கிக் கிடந்தது. 5.30 மணி, 5.40, 5.45 ஒருவரையும் காணோம். இன்னும் சிறிது நேரத்துக்குள் மோட்டார் உந்துருளிகளில் வியாபாரிகளும், உந்துருளியில் பயணம் செய்வோரும் வரத்தொடங்கிவிடுவார்கள். மக்கள் வந்தால், படையினரைத் தாக்கமுடியாது. எனவே எம்மவர்களில் ஒரு பகுதியினர் சற்றுத் தள்ளிப் போய், மக்களைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தனர். நேரமோ போய்க்கொண்டிருந்தது. படையினரின் தேடல் அணி வரவில்லை.

இனி வரப்போவதில்லை என்று நினைத்து எமது அணி திரும்பிச் செல்லமுனைந்தபோது, ஒரு படைவீரரை இளம்பிறை கண்டுவிட்டார். அன்று வந்தது ஐந்து படையினர் மட்டுமே. சோதனைச் சாவடியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த கடைசிக் காப்பரணையும் கடந்து ஐவரும் எமது பகுதியைநோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கடைசிக் காப்பரணில் நின்ற படை வீரர்கள் உறங்கினார்களா, அல்லது அன்று எவரும் நிற்கவில்லையா, இவர்கள் புதியவர்களா, எமது கடைசிக் காப்பரண் என்று தெரியாமல்தான் கடந்து வருகின்றார்களா என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல எவருமில்லை. அமுதாவின் 40.மி.மீ. எறிகணைசெலுத்தியின் அடியோடு நாங்கள் சுடத் தொடங்கினோம்.

அந்தத் திடீர்ச் சண்டையில் இரண்டு சுடுகலன்கள், ஒரு தொலைத்தொடர்புக்கருவி, கொல்லப்பட்ட படையினரின் இருவரின் உடல்கள் என்பவற்றை எடுத்துக்கொண்டு நாம் காடுகளுள் பாய்ந்து விட்டோம். போன புதிதில் இரவில் நடுக்கும் பனியும், பகலில் வறுக்கும் வெயிலுமாக முட்காடுகளைக் காட்டி மிரட்டிக்கொண்டிருந்த மன்னார், நாம் திரும்பிவந்தபோது அழகு பூத்திருந்தது. வீதியோரமெங்கும் வண்ணவிளக்குகள் பூட்டியதுபோல் பாலைப் பழங்கள் மின்னலடித்தவாறு மரங்களில் தொங்கின. காடுகளெங்கும் விளாம்பழம் நிறைந்து கிடந்தது. பிரிய மனமின்றி 1999.06.23 அன்று நாம் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டோம்.

எம்மை வந்து மாற்றிவிட்டது லெப்.கேணல் தணிகைச்செல்வி தலைமையிலான யாழ்.தாக்குதலணி. ஜெயந்தன் படையணி அவர்களுடனேயே நின்றுகொண்டது. மேஜர் அமுதாவின் 82மி.மீ. எறிகணை செலுத்தியை அவர்களுக்குச் சூட்டாதரவு கொடுக்கவென பெரியமடுவில் நிறுத்திவிட்டு வந்திருந்தோம். மன்னாரில் நின்ற தர்ஷாவின் கொம்பனி கிளிநொச்சியில் ஒரு பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்ட பின், அம்பகாமம் வந்துவிட்டது. அதற்கு முன்னரேயே கொம்பனியில் மேலாளராக நின்ற தமிழ்ச்செல்வி, மணலாற்றில் நின்ற முல்லையின் கொம்பனிக்கு மேலாளராகப் போயிருந்தார். மாங்குளத்தில் நின்ற மைதிலியின் கொம்பனியும் அம்பகாமம் புறப்பட்டது. மைதிலியின் கொம்பனியில் மேஜர் கஜேந்தியின் பிளாட்டூன் மன்னார் புறப்பட்டது.

கஜேந்தியின் பிளாட்டூன் பள்ளமடுச் சந்தியை மையமாக வைத்து பள்ளமடு - பாப்பாமோட்டை வீதி, பள்ளமடு - பெரியமடு வீதிகளை ஊடறுத்து நிலைகளை அமைத்தது. மைதிலியின் ஏனைய பிளாட்டூன்கள் அம்பகாமத்தில் ஜமுனாவுடன் நின்ற 5.0 அணியை உள்வாங்கி, தம்மை புதிய கொம்பனியாக மீளமைத்துக்கொண்டன. இப்போது அம்பகாமத்தில் தர்ஷாவினதும், மைதிலியினதும் இரண்டு கொம்பனிகள் நிலைகொண்டன. மணலாற்றில் நின்ற எம்மவர்கள் சும்மா இருக்கவில்லை. எமது காப்பரண்களைக்கடந்து எதிரேயுள்ள மண்கிண்டிமலைப் படைத்தளத்தின் காப்பரண்களையும் கடந்து, படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் இரண்டு முறை உள்நுழைந்து தாக்கிவிட்டுத் திரும்பியிருந்தனர். அன்று பகல் கயல்விழியின் தலைமையில் எமது படையணியின் ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணி எமது முன்னரங்கநிலைகளைக் கடந்தது. பகலவள், பைந்தமிழ், ஈழமங்கை, தர்சிகா, ரங்கா, அஜித்தா, ஆஷா, மணலாற்றுப் படையணியைச் சேர்ந்த அருளப்பன், இன்னுமொருவர் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரைக் கொண்ட சிறு குழுவாக அந்த அணி இருந்தது. இரவில் படையினரின் முன்னரங்கநிலையை மிகவும் விழிப்புடன் கடந்து ஒருவர் பின் ஒருவராக உள்நுழைந்தார்கள். ஏற்கனவே கயல்விழி பல தடவைகள் வேவு பார்த்தபடியே இவர்கள் கடந்த பகுதியிலிருந்து காப்பரண்களில் இன்றும் படையினர் இல்லை.


முன்னரங்க நிலையிலிருந்து 500மீ. பின்னாலுள்ள தார்ச் சாலையால் சிலோன் தியேட்டர் படைத்தளத்துக்குப் போகலாம். அந்தச் சாலைக்குப் போவதற்கிடையில், முன்னரங்கிலிருந்து 250மீ. தூரத்தில் கொம்பனிக் கட்டளைப் பணியகம் அமைந்திருந்தது.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 306. | லெப்.சஞ்சிகா/ தேன்மொழியாள் | பஞ்சுலக்சுமி ராஜன் | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 307. | லெப்.அஜித்தா | வனஜா சின்னத்தம்பி | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 308. | கப்டன்.மீனா | காயத்திரி கிருஸ்ணமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய |
| 309. | 2ம்.லெப்.புதியவள்/வாசுகி | அன்னமேரி ஆனந்தன் | கண்டி | 1997.10.13 | பெரியமடு ஜெயசிக்குறுய் |
| 310. | கப்டன்.வாணி | உசாவதனி நாகலிங்கம் | யாழ்ப்பாணம் | 1997.10.13 | பெரியமடு ஜெயசிக்குறுய் |
| 311. | மேஜர்.காஞ்சனா | தேவரஞ்சினி கதிரவேலு | யாழ்ப்பாணம் | 1997.10.18 | கரிப்பட்டமுறிப்புஜெயசிக்குறுய் |

# தேர்தலில் ஆயுதக்கட்சிகள் தனித்து போட்டியிட்டால் அவர்களின் வெற்றி உறுதிசெய்யப்படும்



போராட்ட வரலாற்றில் ஆயுதம் மற்றும் அஹிம்சை என போராட்டங்கள் பரிணாம வளர்ச்சியினைக் கண்டநிலையில், திம்பு பேச்சுவார்த்தைகளின் போது அனைத்து ஆயுதக்கட்சிகளும் ஒருமித்தே செயற்பட்டன. அதன்பின்னரான காலப்பகுதிகளில் போராட்டமானது வேறு திசைகளில் மாற்றம்பெற்றது. ஈரோஸ் இயக்கத்தினைப்பொறுத்தவரையில்மாணவர் அமைப்பினைக்கொண்ட அணியாகக் காணப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப்இனைப் பொறுத்தவரையில் மோட்டார் தாக்குதல்களில் சிறந்துவிளங்கினர். ரெலோ முகாம்களைத்தாக்கியழிப்பதில் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களது முதலாவது தாக்குதல் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

அப்பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையமொன்று தாக்குதலுக்குட்பட்டது. விடுதலைப் புலிகளைப்பொறுத்தவரையில் ஆயுதங்கள் குறைவாக காணப்பட்டபொழுதும் தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை கையாள்வதில் திறமைசாலிகளாகக் காணப்பட்டனர். புளொட் அமைப்பினைப்பொறுத்தவரை லெபனான் பயிற்சிகளைப் பெற்றிருந்தனர். சுமார் 39000 போராளிகளைக்கொண்ட அமைப்பாக அக்காலத்தில்வலுவாகக்காணப்பட்டனர். இந்நிலையில் இலங்கைத்தீவில் ஆயுதக்கட்சிகளது பரிணாம வளர்ச்சியைக்கண்ட சர்வதேச நாடுகள், இவர்களது வளர்ச்சியினை மட்டுப்படுத்தும் நோக்கில் செயற்பட ஆரம்பித்தன.

இவ்வியக்கங்களுக்குள் விடுதலைப்புலிகள் சற்று வித்தியாசமாக பிரபாகரனது தலைமையில் சிந்திக்கலாயினர். அக்காலகட்டத்திலிருந்த ரெலோ அமைப்பின் சிறி சபாரெத்தினம், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா, புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் என்ற இந்த நான்கு இயக்கங்களும் இந்தியாவில் சிறப்புப்பயிற்சிகளைப் பெற்றிருந்தனர். இந்தியா தனது தேவைக்காக இவ்வியக்கங்களை பயன்படுத்திக்கொள்வதை அறிந்த பிரபாகரன் இந்தியாவினது செயற்பாடுகளை எதிர்க்க ஆரம்பித்தார்.

தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுவருவதை ஜீரணித்துக்கொள்ள இயலாத பிரபாகரன் தமிழ் மக்களுக்கான சிறந்த வழி ஆயுதப்போராட்டமே என தீர்மானித்தார். அவரது ஆயுதப்போராட்டமானது பரிணாம வளர்ச்சியினைக் அடைந்தவேளை சர்வதேசம் வியக்கும் அளவிற்கு அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழீழம் மலர்ந்துவிடும் என்ற நிலை காணப்பட்டபொழுது, அதனை சர்வதேச சக்திகள் அனைத்தும் இணைந்து பிரபாகரனது போராட்டத்தை மழுங்கடிக்கச்செய்தன. இன்று அந்தப் போராட்டம் தேவைதான் என ஆயுதக்கட்சிகளும், அதனை எதிர்த்தவர்களும் கூறிவரும் அதேநேரம், தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக அடுத்த அத்தியாயம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. ஆயுத வழி போர் முறைகள் பயனற்றுப்போக, அரசியல், அஹிம்சை ரீதியிலான போராட்டங்களே இறுதியில் கைகொடுத்தன.

அஹிம்சை வழியிலான அரசியலுக்குள் அடியெடுத்த தமிழரசுக்கட்சி கிளர்ச்சிகளை நாடுமுழுவதும் முன்னெடுத்தது. இலங்கையின் பாராளுமன்றத்திற்கு முன்பாகவும் தமிழரசுக்கட்சி சத்தியாக்கிர போராட்டங்களை சிங்கள இனத்திற்கெதிராக முன்னெடுத்தது. இதனால் சிங்களவர்கள் சத்தியாக்கிரக போராட்டங்களில் ஈடுபட்டவர்களை தாக்கினர்.

இதில் தந்தை செல்வா அணியினர் சாதித்தது என்ன? என்பதைப்பார்க்கின்றபொழுது, மலையக மக்களின் பிரஜாவுரிமை, கிழக்குமாகாண மக்களின் குடியேற்றம் என்கின்ற பிரச்சினைகளிலும் மையங்கொண்டிருந்த தமிழரசுக்கட்சி தேர்தலில் படுதோல்வியை அடைய நேரிட்டது. வடமாகாணத்தில் கோப்பாய் தொகுதியில் கு.வன்னியசிங்கம் மட்டுமே ஒரு சிலநூறு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். கந்தளாய் குடியேற்றப் பிரச்சினையை முன்வைத்து தமிழரசுக்கட்சி சார்பில் திருமலையில் போட்டியிட்ட இராஜவரோதயம் மட்டுமே கிழக்குமாகாணத்தில் வெற்றி பெற்றார். கிழக்கு மாகாணத்தைப்பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்து தலைவர்களின் கீழ் இயங்கிய கட்சிகளின் முதலாவது வரவு இது என்பதால், இராஜவரோதயத்தின் வெற்றி தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரையில் பெருவெற்றியாக இருந்தது. ஆனால் தமிழரசு கட்சியின் யாழ்ப்பாணத் தலைவர்கள் எல்லாம் அதற்குமுன்னர் தமிழ் காங்கிரசில் இருந்துபிரபல்யம்ஆனவர்கள் என்கின்றவகையில், வடமாகாணத்தில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உட்பட தமிழரசு கட்சியினர் அடைந்த தோல்வியானது எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தைப்பொறுத்தவரையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழரே ஆயினும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வாழும் மக்களின் பிரச்சினையையிட்டு கவலைகொள்ளாத ஒரு மனநிலையையே யாழ்ப்பாணத்தவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதையே இத்தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டின. இதனை மூத்த எழுத்தாளர் எஸ்.பொ "யாழ்ப்பாண மக்கள் தமிழ் உணர்வுக்கு மேலாக சொந்த நலன்களையும், வசதிகளையும் தக்கவைத்துக்கொள்வதற்கே முன்னுரிமை கொடுத்தார்கள் என்பதையே அத்தேர்தல் மீள வலியுறுத்தியது." (வரலாற்றில் வாழுதல் பாகம்-1, பக்-402) எனச் சுட்டிக்காட்டுகிறார்.

இதன்காரணமாக அடுத்துவந்த 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரின் மரபுவழித்தாயகம் பற்றிய மிக ஆக்ரோசமான பிரச்சாரங்களை முன்னெடுக்கவேண்டிய தேவை தமிழரசுக்கட்சிக்கு எழுந்தது. அதே வேளை தென்னிலங்கையில் இருந்து வந்த "ஆட்சிமொழி அந்தஸ்தில் இருந்து ஆங்கிலம் அகற்றப்படும்" என்கின்ற அறிவிப்பு யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தை கதிகலங்கச்செய்தது. பாடசாலை ஆசிரியர்களாக, அதிபர்களாக, தபால், தொலைத்தொடர்பு, ரயில்வே, சுகாதாரம் என்கின்ற அனைத்து துறைகளிலும் தமது ஆங்கில புலமைகளுடன் கூடிய தலைமை அதிகாரிகளாக, நிர்வாக உத்தியோகத்தர்களாக இலங்கை எங்கும் வியாபித்திருந்த யாழ்ப்பாணத்து அதிகார மத்தியதரவர்க்கம் ஆங்கிலம் அகற்றப்படப்போவதை இட்டு அச்சமுற்றது இயல்பே.

இந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த முனைந்த செல்வநாயகம் மலையக மக்களின் பிரஜாவுரிமை பிரச்சினைகளை கைவிட்டு, கிழக்கு மாகாணமக்களின் குடியேற்றப் பிரச்சினைகளையும் இரண்டாம் பட்சமாக்கி மொழிப்பிரச்சினையை முன்னிறுத்தி தேர்தலில் இறங்கினார். இலங்கை தமிழருக்கு ஒரு சமஸ்டி ஆட்சி அவசியம் எனக்கோரினார். Federal party எனும் பெயரில் அவர் உருவாக்கிய கட்சி தமிழில் சமஸ்டி கட்சி என்றே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கொழும்பில் சமஸ்டி கோரிக்கொண்டு வடகிழக்கு எங்கும் அதனை தமிழரசுக்கட்சி என்று மிகைப்படுத்தி பேசினார் செல்வநாயகம். இதனூடாக தமிழ் மக்களுக்கென ஒரு அரசை உருவாக்கப்போவதாக மரபு வழி தாயகத்தை நோக்கிய பெரும் கனவொன்றை அவர் கட்டியமைத்தார். யாழ்ப்பாண மத்தியதர வர்க்கம் எதிர்கொண்ட இந்த மொழிப்பிரச்சினையானது எல்லாத் தமிழருக்கும் உரியதாக நம்பவைக்கப்பட்டதனூடாக கிழக்கு வாழ்தமிழர்களும், முஸ்லிம்களும் பிரதேச, மத வேறுபாடுகளைக் கடந்து தமிழரசுக்கட்சியில் ஒன்றித்தனர்.

இதே காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஐக்கியதேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எனும் புதிய தோர் கட்சியைத் தோற்றுவித்தது. இந்தக்கட்சியே தாம் ஆட்சிக்கு வந்தால் ஆங்கிலத்தை அகற்றி சிங்களத்தை தேசியமொழி ஆக்குவது எனும் இலட்சியத்தை முன்னிறுத்தி "நமது ஆட்சி" கோரிக்கையுடன் களமிறங்கியது. இலங்கை முழுக்க இந்த மொழிப்பிரச்சினையை முன்வைத்து நடாத்தப்பட்ட 1956 ஆம் ஆண்டு தேர்தலானது தென்னிலங்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும், வடக்கு கிழக்கில் தமிழரசுக்கட்சியையும் வெல்லவைத்தது.

குறிப்பாக இந்த மொழிப்பிரச்சினை ஏற்படுத்திய பெரும் அலை அவ்வேளையில் மட்டக்களப்பின் தனிப்பெரும் தலைவராக இருந்த மு.இராசமாணிக்கம் போன்றோரைக் கூட தமிழரசுக்கட்சியுடன் இணைத்துக்கொள்வதில் பெரும் பங்காற்றியது. எழுத்தாளராகவும், இலக்கியவாதியாகவும் அறியப்பட்டிருந்த செ.இராஜதுரை போன்றவர்களின் அரசியல் நுழைவையும் சாத்தியப்படுத்தியது.

1956 ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்கா வெற்றிபெற்று ஆட்சி அமைத்தார். காலணித்துவ ஆட்சியின் கீழ் இருந்த ஒரு நாடு என்கின்ற வகையில் அந்நாடு சுதந்திரமடைந்தவுடன் காலணித்துவ ஆட்சியாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட அன்னிய மொழியான ஆங்கிலத்தை அகற்றுவதென்பது சுதேச மொழிகளின் மீள் உயிர்ப்புக்கு அவசியமானதாகும். அந்தவகையிலேயே அரசமொழி அந்தஸ்தில் இருந்து ஆங்கிலத்தை பண்டாரநாயக்கா அகற்றினார். அதேவேளை அரசகரும மொழியாக சிங்களத்துடன் சேர்ந்து தமிழும் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் அவசியம். இத்தகைய சட்டத்திற்கான முனைப்புக்கள் 1925 ஆம் ஆண்டு காலத்தில் இருந்தே தென்னிலங்கையில் சுயபாசைகளுக்கான இயக்கமாக உருவாகத்தொடங்கியிருந்தது. ஆனால் தமிழ் தலைமைகள் இந்த சுயபாசைகளுக்கான இயக்கத்தை ஆரம்பத்தில் இருந்து எதிர்த்தே வந்தனர்.

தமது ஆங்கிலப்புலமை காரணமாக இலங்கையின் சட்ட, நிர்வாகத்துறைகளில் தாம் கொண்டிருந்த அந்தஸ்துகள் இழக்கப்பட்டுவிடும் என்கின்ற அச்சமே அதற்கு காரணமாகும். தமிழ் தலைவர்கள் கொண்டிருந்த ஆங்கிலமோகமே சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட அரசகரும மொழிச்சட்டமானது தமிழை விடுத்து சிங்களத்தை மட்டும் அரியணை ஏற்றும் நிலைக்கு சிங்களத்தலைவர்களை இட்டுச்சென்றது என்கின்ற உண்மைகள் எமது வரலாறுகளில் மறைக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி சிங்கள அரசகரும மொழிச்சட்டத்தோடு இணைந்து அதன் உபபிரிவாக வடக்கு கிழக்கு போன்ற தமிழர் வாழும் பகுதிகளில் தமிழுக்கு உத்தியோகபூர்வமொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. இந்த சிறப்பு விதிகளை மறைத்து தனிச்சிங்களச் சட்டம் என்றவாறாக 1956 ஆம் ஆண்டு மொழிச்சட்டத்தை தமிழ் அரசியல்வாதிகள் திரிபுபடுத்தினர். மொழிச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டபோது சுமார் 5 வருடங்களுக்கு அதற்கெதிரான கிளர்ச்சிகளை நாடுமுழுவதும் தமிழரசுக் கட்சிமுன்னெடுத்தது. காலிமுகத்திடலில் இலங்கை பாராளுமன்றத்திற்கு முன்பாக தமிழரசுக்கட்சியினர் நடாத்திய மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்களவர்களின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளானது. அதைத்தொடந்து 1958 ஆம் ஆண்டு பாரிய இனக்கலவரமாக வெடித்தது. இவ்வினக்கலவரமானது தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களை வடகிழக்கு நோக்கி அகதிகளாக ஓடச்செய்தது. இவையனைத்தும் வடகிழக்குக்கு வெளியே தமிழர்களுக்கு பாதுகாப்பே இல்லை என்கின்ற உணர்வை தமிழ் மக்களிடம்ஏற்படுத்துவதில்பெரும்தாக்கம் செலுத்தின. இந்தக்காலகட்டத்தில் தமிழரசுக்கட்சி முன்வைத்த தமிழர் தாயகம் பற்றிய அவசியம் தமிழ் மக்களால் ஆழமாக உணரப்பட்டது.

தமிழரசு, சமஸ்டி, தமிழர் தாயகம் என்றெல்லாம் காலத்துக்கு காலம் வந்த தமிழ் தலைவர்கள் பிரச்சாரங்களை முன்வைக்கத்தொடங்கியிருந்த போதிலும் இந்த மரபுவழித்தாயகத்தை நோக்கிய கோட்பாட்டுக்கு எவ்வித அடிப்படை வலுவையும் வழங்கும் முயற்சியில் அவர்கள் இறங்கவில்லை. அதாவது தமிழர் தாயகம் என்பது எது? அதன் எல்லைகள் யாவை? அதற்கான வரலாற்று ஆதாரம் என்ன? என்பது பற்றியெல்லாம் தமிழரசு கட்சியினரிடம்கூட ஒரு தெளிவான வரையறைகள் இருக்கவில்லை. இந்த தாயக கோசத்தை எழுப்பியவர்களில் முக்கியமானவராய் இருந்த தமிழ் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரான சி.சுந்தரலிங்கம்தான் முதன் முதலில் "இலங்கை தமிழர்களின் மரபு வழி வந்த தாயகம் என்பது சிலாபத்தில் இருந்து வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் நிலப்பரப்பு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டம் உட்பட தெற்கில் உள்ள வளவை கங்கை வரைக்கும் பரந்துகிடக்கும் நிலப்பரப்பாகும்." என எழுதினார். இந்த சுந்தரலிங்கத்தின் வரையறையின் பின்னரே இந்த தாயகக் கோட்பாட்டுக்கு ஒரு பருமட்டான வடிவம் கிடைத்தது. இதற்குகூட எவ்வித வரலாற்று ஆதாரங்களோ, ஆய்வு நூல்களோ தமிழ் அரசியல் தரப்புகளில் இருந்தோ, அறிஞர் தரப்புகளில் இருந்தோ முன்வைக்கப்படவில்லை. சுந்தரலிங்கம் தனது கூற்றுக்கு "பிறவுண் றிக்" எனும் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியின் முதலாவது (1802) செயலாளரது அறிக்கை ஒன்றை மட்டுமே ஆதாரமாக காட்டியிருந்தார்.

1961 ஆம் ஆண்டு வடகிழக்கில் உக்கிரமடைந்த சத்தியாக்கிரக நிகழ்வுகள், தமிழரசு தபால் சேவை போன்றவை தமது பூர்வீகமான தாயகம் நோக்கிய அரசியல் அவாவை தமிழ் மக்களிடத்தில் அதிகரிக்கச்செய்வதில் முக்கியபங்காற்றின. மொழிச்சட்டத்தை எதிர்த்து ஐக்கியதேசியக்கட்சியில் எம்பியாக இருந்த ஏ.எம்.ஏ.அசீஸ் போன்ற தலைவர்கள் தமது பதவியை ராஜினாமா செய்தது தொடங்கி சத்தியாக்கிரக நிகழ்வுகளின்போது சிறைநிறைப்புப் போராட்டத்தில் முன்னணிவகித்த மசூர் மௌலானா, எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ.கபூர் வரை முஸ்லிம்களும் தமிழர் தாயகம் நோக்கிய போராட்டத்தில் தம்மை இணைக்கத் தொடங்கினர்.

தொடரும்...

சுழியோடி

# நிறைவேற்றதிகார ஆட்சிமுறையும், அதன் சாதக பாதக தன்மைகளும்

1947ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் நடைமுறையில் இருந்ததும், மக்கள் வாழ்க்கையில் நன்கு பரீட்சயமானதுமான பாராளுமன்ற ஆட்சி முறையை நீக்கிவிட்டு 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் கீழ் நிர்வாக விடயங்களை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடே நிறைவேற்று ஜனாதிபதித்துவ ஆட்சி முறையாகும். 1947 முதல் 1977 ஆம் ஆண்டு வரை இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி நிலவியதால் நாட்டின் நிர்வாகம் உண்மை நிர்வாகம், நாம நிர்வாகம் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. இவற்றில் பெரியளவு நிர்வாகியாகவே ஜனாதிபதி காணப்பட்டார்.

1972ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் படி ஜனாதிபதி பிரதமரின் சொல்லுக்கும், செயலுக்கும் கட்டுப்பட்டு நடந்தமையினால் நாடு பொருளாதார ரீதியாக பல பிரச்சினைகளை எதிர் நோக்குவதாகக் கூறி ஐக்கிய தேசிய கட்சியினர் சட்டதுறைக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக செயற்படக்கூடிய ஒருவரை நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பாக நியமிக்க முன் வந்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவரே ஜனாதிபதியாவார்.

1947ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை நிர்வாக துறையானது சட்டத்துறையின் கெடுபிடிகளுக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டே செயற்படவேண்டியிருந்தது. எனவே, இத்தகைய தன்மையை நீக்கி சட்டத்துறையின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது தன்னிச்சையாக செயற்படக் கூடிய நிர்வாகத் துறையை ஏற்படுத்தும் முகமாக ஜனாதிபதித்துவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பான சுவடுகள் அரசியலமைப்பில் 07 ஆம் அத்தியாயத்தில் 30–41 வரையான உறுப்புரைகளில் இடம்பெற்றுள்ளன.

30 உறுப்புரையில் "இலங்கைக்கு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும் எனவும் அவரே ஆட்சிதுறையின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், முப்படைகளின் தளபதியாகவும் விளங்குவார் என்றும் இவர் 06 ஆண்டுகள் பதவி வகிக்கவென விகிதாசார பிரதிநிதித்துவத்தின் தனிமாற்று வாக்கு முறை மூலம் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படவேண்டும்" என யாப்பு விதி கூறுகிறது. அரசியல் அமைப்பின் 31 ஆம் உறுப்புரையில் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டிய தகமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அவையாவன: இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். 30 வயதை கடந்தவராக வேண்டும். இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படாதவராக இருக்க வேண்டும். (இவ்விதி அரசியல் அமைப்பின் 18 ஆம் சீர்த்திருத்தத்தினூடாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒருவர் தற்போது எத்தனை தடவை வேண்டுமானாலும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படலாம்.)

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவராகவோ இருந்தல் வேண்டும். (வேட்பாளர் பட்டியலில் வாக்காளராக தகுதி பெற்று எவரும் ஜனாதிபதியாக போட்டியிடலாம்) குற்றம் செய்ததற்கான தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும். புத்தி சுயாதீனம் உடையவராக இருத்தல் வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் அரசியல் கட்சி ஒன்றினூடாக போட்டியிட்டால் 50,000 ரூபாவையும், சுயேட்சையாகப் போட்டியிட்டால் 75,000 ரூபாவையும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்.

### ஜனாதிபதி தேர்தல் முறை (94ம் சரத்து)

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் படி ஜனாதிபதியானவர் மக்களால் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் தனிமாற்று வாக்குரிமையினூடாக தெரிவு செய்யப்படுகின்றார். ஜனாதிபதி தேர்தலின் போது முழு இலங்கையும் ஓரே தேர்தல் தொகுதியாக கணிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும்.

தேர்தலின் போது இருவர் மாத்திரம் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே வழங்கப்படும். மூவர் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கும் ஒரு விருப்பு வாக்கும் வழங்கப்படும். மூன்று பேருக்கு மேல் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கும் இரண்டு விருப்பு வாக்குகளும் வழங்கப்படும். தேர்தலில் வாக்காளர் தனது முதலாம் வாக்கினை மட்டும் வழங்கி விட்டு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்கினை வழங்காது இருக்கலாம், இது செல்லுபடியான வாக்காகும்.

இருப்பினும் வாக்கு ஒன்று அடையாளமிடப்படாத நிலையில் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் மாத்திரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வாக்கு சீட்டானது வாக்கொன்றை அடையாளப்படுத்தாமை காரணமாக நிராகரிக்கப்படலாம். ஜனாதிபதி தேர்தலின் போது பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொள்ளலாம். "01" என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளர் ஒருவருக்கு தமது வாக்கினை அளிக்க முடியும். "2" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் ஊடாக தமது 3ம் விருப்பினையும் அளிக்க முடியும். வாக்காளர் ஒருவர் தமது வாக்கினை மாத்திரம் அளிக்க முனைவாராயின் வாக்கு சீட்டில் புள்ளடியிட்டு (X) தமது வாக்கினை அளிக்க முடியும்.

வாக்கு சீட்டொன்றில் ஒரு வாக்காளன் அதிகப்படியான வாக்குகளை அளித்திருந்தால் அவ்வாக்கு சீட்டு நிராகரிக்கப்பட்டதாக கணிக்கப்படும். ஜனாதிபதி தேர்தலானது பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அல்லது பதவிகாலம் முடிந்து இரண்டு மாதங்களுக்கு இடையில் நடத்தப்படலாம். வாக்கு கணிப்பீட்டின் போது 50.1 வீத வாக்கை பெற்றவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். மூன்று வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடுகின்ற போது எவரும் அருதிப் பெரும்பான்மை பெற முடியாது போகலாம். அவ்வாறான வேளையில் வேட்பாளர்களுள் அதிகூடுதலான் வாக்குகளைப் பெற்ற இருவர் மாத்திரம் போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏனையோர் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுவர்.

நீக்கப்பட்டவர்களின் பட்டியலில் காணப்படுகின்ற இரண்டாம் விருப்பு வாக்குகள் வாக்கு கணிப்பீட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குகளோடு சேர்த்து கொள்ளப்படும். அப்போதும் அருதிப் பெரும்பான்மை பெறாத சந்தர்ப்பத்தில், நீக்கப் பட்டவர்களின் மூன்றாம் விருப்பத்தெரிவுகள் சேர்த்துக் கொள்ளப்படும். அப்போதும் அருதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் திருவுள சீட்டொன்றின் மூலமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். இதுவரை இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில் முதல் வாக்கு கணிப்பீட்டிலேயே, 1982–52.7, 1988–50.4, 1994–62.2, 1999–51.9, 2005–50.3, 2010–57.0. என்ற ரீதியில் வாக்குளைப் பெற்று கொண்டமையினால் இரண்டாம் கட்ட வாக்கு கணிப்பீடுகள் எதுவும் நடைபெறவில்லை. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியை பொறுப்பேற்றார்.

### 5.6.1 ஜனாதிபதியின் அதிகாரங்கள்

1978ம் ஆண்டு யாப்பின் படி எற்படுத்தப்பட்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறையானது, தனி ஒரு நபரிடம் நிர்வாக அதிகாரங்களை ஒப்படைத்ததாக அமைகின்றது. இந்நிர்வாக துறையானது சட்டதுறையின் கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்ட தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயற்படக்கூடிய நிறைவேற்று அதிகாரத்தை உடையதாக காணப்படுகின்றது. நிறைவேற்று நிர்வாகி எனும் ரீதியில் இவரின் அதிகாரங்கள் மேலோங்கியுள்ளன. ஜனாதிபதி நிர்வாகத்துக்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தாலும் அவர் சட்டம், நிர்வாகம், நீதி, பாதுகாப்பு என பல்துறை அதிகாரங்களை கொண்டவராக காணப்படுகின்றார்.

### சட்டதுறை அதிகாரங்கள்

பாராளுமன்ற முதற் கூட்டத் தொடரின் போது கொள்கை பிரகடன உரையை வாசித்தல். பாராளுமன்ற சடங்கு முறையான இருக்கைக்கு தலைமை தாங்குதல்: பாராளுமன்ற உறுப்பினரல்லாவிட்டாலும் பாராளுமன்றத்திற்கு செல்லவும், உரையாற்றவும், தமது வேண்டுகோளை நிறைவேற்றித் தரும்படி கேட்டு கொள்ளவும் அதிகாரம் உடையவர். பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் அனைத்தும் இவருக்கும் உரித்துடையதாகும். பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், போன்ற அதிகாரம் காணப்படினும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் போது 70 சரத்தின் (அ.ஆ.இ.ஈ) ஆகிய உப பிரிவுகளை அனுசரித்தே இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

70 (அ) உபப்பிரிவு

பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று ஒரு வருட காலத்தினுள் பாராளுமன்றம் கேட்டு கொண்டாலே ஒழிய அதனை கலைக்க முடியாது.

70 (ஆ) உபப்பிரிவு

ஜனாதிபதியால் வாசிக்கப்படும் கொள்கை பிரகடன உரை தோல்வியடைந்தாலும் பாராளுமன்றம் கலைக்க வேண்டியதில்லை.

70 (இ) உபப்பிரிவு

பாராளுமன்றில் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

70 (ஈ) உபப்பிரிவு

பாராளுமன்றில் வரவு - செலவு திட்டம் தோல்வியடைந்தால் பாராளுமன்றம் கலைக்கப்படலாகாது. இரண்டாம் முறையும் வரவு - செலவு திட்டம் தோல்வியடைந்தால் பாராளுமன்றம் கலைக்கப்படல் வேண்டும்.

6) பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட ஒரு விடயத்தை தேசிய முக்கியத்துவம் மிக்கது எனக் கூறி மக்கள் தீர்ப்புக்கு விட்டு சட்டமாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

7) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தை நியமித்தல்.

8) சட்டமா அதிபரை நியமித்தல்.

9)தான் விரும்பிய போது பாராளுமன்றத்திற்கு சென்று உரையாற்றல்.

### நிர்வாகத் துறை அதிகாரங்கள்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் படி ஜனாதிபதியானவர் அரசின் தலைவராகவும், ஆட்சி துறையில் தலைவராகவும், ஆயுதம் தாங்கிய முப்படைகளின் தலைவராகவும், காணப்படுவாரென யாப்பு கூறுகின்றது. அவ்வகையில் நிறைவேற்றுத்துறையில் முழுமையான அதிகாரம் பெற்றவராக ஜனாதிபதி காணப்படுகின்றார்.

பிரதமரை நியமித்தல் (பிரதமரை நியமிக்கும் போது தனக்கு நம்பிக்கையான ஒருவரையோ, கட்சியில் நம்பிக்கைமிக்க ஒருவரை பிரதமராக நியமிக்கலாம்) 44ம் சரத்தின் 1ம் உபபிரிவின் படி அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. 44 (2) உபபிரிவின் படி தான் விரும்பிய பொழுது அமச்சரவையை கலைக்கலாம். நியமிக்கப்பட்ட அமைச்சரவையில் எவரையும், தமது அதிகாரத்தினூடாக, அரசியலமைப்பின் 47ம் சரத்தை பயன்படுத்தி பதவியிலிருந்து நீக்கலாம். இவ் அதிகாரத்தை பயன்படுத்தியே 2007.02.09 திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மங்கலசமரவீர, ஸ்ரீபதி சூர்யராச்சி, அனுரபண்டார நாயக்க போன்றோரின் பதவிகளை தாம் பொறுப்பேற்றார்.

அமைச்சர்களுக்கான இலாகாக்களை ஒப்படைத்தல். அமைச்சரவையின் தலைவராக செயற்படல். உயர் நிர்வாக திணைக்களத் தலைவர்களை நியமித்தல். உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல். வெளிநாடுகளுடன் நிர்வாக ஒப்பந்தங்களை செய்தல். குறைகேள் அதிகாரியை நியமித்தல். பகிரங்க சேவை ஆணைக்குழுவை நியமித்தல். அமைச்சுக்களின் செயலாளர்களை நியமித்தல். அமைச்சர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல்.

### நீதித்துறை அதிகாரங்கள்

பிரதம நீதியரசரை நியமித்தல். உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல். நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்தல். குற்றவாளிகள் விடயத்தில் தலையிடல். உதாரணம்:–2010 ஆண்டில் சிறையிடப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா அவர்களை அரசியல் அமைப்பில் 34ம் சரத்தில் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி 21.05.2012 அன்று பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

### பாதுகாப்பு துறை அதிகாரங்கள்

முப்படைகளின் தளபதிகளை நியமித்தல். பாதுகாப்பு அமைச்சராக விளங்குதல் அல்லது பாதுகாப்பு அமைச்சரை நியமித்தல். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நியமித்தல். பாதுகாப்பு அமைச்சுக்குள் உள்ளடக்க வேண்டிய விடயங்களை நியமித்தல். (2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சுக்குள் மிக முக்கியமான 21 துறைகளை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.) போர், சமாதான பிரகடனங்களை மேற்கொள்ளல். வெளி நாடுகளுடன் பாதுகாப்பு உடன் படிக்கையில் கைச்சாத்திடல். அவசர கால ஊரடங்கு சட்டம் பிறப்பித்தல். வெளிநாடுகளுடன் போர் பிரகடனம் மேற்கொள்ளல்.

ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாதல் (38 ஆம் சரத்து) 1978 ஆம் ஆண்டு யாப்பின் படி அரசியலமைப்பின் 38(1) உபபிரிவு ஜனாதிபதியின் பதவி வரிதாகக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பான வாசகங்கள் இடம் பெறுகின்றன. இதன் படி பின்வரும் சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகும். பதவி காலத்தின் போது இறத்தல். தன் கைப்பட எழுதிய இராஜினாமா சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை பிரஜை என்ற அந்தஸ்தை இழக்கும் போது, தெரிவாகி ஒரு மாதத்துக்கு மேல் பதவியை பொறுப்பேற்காத போது. இவரின் தெரிவு செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் போது, ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணையொன்று நிறைவேற்றப்படும் போது. ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரனை கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் 38(2) குறிப்பிடப்பட்டுள்ளது. உடல், உள பலவீனங்களின் காரணமாக பதவியை பொறுப்பேற்க முடியாது எனக் கருதுகின்ற போது. வேண்டுமென்றே அரசியலமைப்பை மறுக்கின்ற குற்றச்சாட்டு. தேசத்துரோகம் குற்றம் விளைவித்தல். பதவிக்குரிய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தல். இலஞ்சம், ஊழல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடல். ஒழுக்க கேடான நடவடிக்கைகளில் ஈடுபடல்.

இது போன்ற ஏதாவதொரு குற்றச்சாட்டினை மனுவாக தயாரித்து மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களுள் 2,3 கையொப்பங்களைப் பெற்று சபாநாயகரிடம் சமர்ப்பித்தால் குறித்த விடயம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

# பாராளுமன்றத்தேர்தல் நிறைவுபெற்றதும் தமிழ்மக்களுக்கான சலுகைகள் அனைத்தும் குறைக்கப்படும்

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துவிட்ட நிலையிலும் தமிழினத்தை அடக்கியொடுக்கும் மறைமுகமான யுத்தம் அரசினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்தகால வரலாற்றினை எடுத்துக் கொண்டால், தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கெதிரான செயற்பாடுகளே சிங்கள அரசினால் முன்னெடுக்கப்பட்டுவந்தன. திம்புமுதல் டோக்கியோ, பண்டா–செல்வா வரையான ஒப்பந்தங்கள் என அனைத்தும் எந்தவொரு பயனையும் பிரதிபலிக்கவில்லை. சர்வதேசத்தின் தலையீடுகள் காரணமாக வெளியூர் உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் இணக்கம் காண முடியாது இனவாத அரசியலை சிங்கள அரசு நடாத்திவந்தது. குறிப்பிட்ட காலம் வரை யுத்தம் பின்னர் சமாதானப்பேச்சுக்கள், அரசியல் தீர்வு, இடைக்கால நிர்வாகம், சர்வதேச பேச்சுவார்த்தைகள் என நடைபெற்ற அனைத்துப் பேச்சுக்களும் விடுதலைப்புலிகளையும், அவர்களது போராட்டத்தையும் பலவீனப்படுத்தும் நோக்காகவே அமைந்திருந்தது.

சிறிமாவோபண்டாரநாயக்காவினுடைய அரசு தமிழ்மக்களுக்கு என்ன செய்தது? வெறுமனே சிங்கள மொழிச்சட்டத்தினை பாராளுமன்றில் அமுல்படுத்தியது. கரையோரங்களில சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இவ்வாறிருக்க உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தீவிரம் காட்டினாரே தவிர, தமிழ்மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் நோக்கில் அவர் செயற்படவில்லை. அதன்பின்னராக ஆட்சிபீடமேறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ்–சிங்கள கலவரத்தினை தூண்டிவிட்டார். அரசியல் யாப்பினை தனக்குச்சாதகமாக வடிவமைத்துக்கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனா, எந்த விடயங்களை நிறைவேற்றுவதானாலும் பாராளுமன்றில் மூன்றில் இரு பெரும்பான்மை அவசியம் என அந்த யாப்பில் எழுதப்பட்டது. இன்றைய காலகட்டத்தினைப்பொறுத்தவரை மைத்திரி அரசின் ஊடாக நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு வரலாற்றுச்சாதனை எனலாம். ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் ஜே.வி.பியினர் சரமாரியாகக்கொல்லப்பட்டனர். ஆங்காங்கே டயர்கள் மூலம் எரியூட்டப்பட்டனர். இலங்கையின் தென்பகுதியில் மரணஓலம் கேட்டுக்கொண்டிருந்தது.

இக்காலத்திலும் கூட தமிழினம் ஒடுக்கப்பட்டுக்கொண்டே வந்தது. 24மணி நேரத்தில் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்தொழிப்பேன் என ஜே.ஆர் சவால் விடுத்தார். அதனால் அவர் தமிழினத்திற்கு அழிவினையே ஏற்படுத்த ஆரம்பித்தார். ஆசியாவின் தலைசிறந்ததாகக் கருதப்படும் யாழ். நூலகம் UNP அரசினால் திட்டமிட்டு எரியூட்டப்பட்டது. தொடர்ந்தும் வன்முறைகளே வெடித்தன. அதன் பின் ஆட்சிபீடமேறிய ரணசிங்க பிரேமதாஸா விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். அது அவரது தனிப்பட்ட அரசியல் நடவடிக்கையேயாகும். 1989இன் இறுதியில் இந்திய இராணுவம் இலங்கையை ஆக்கிரமித்துக்கொண்டபோது இவர்களை எவ்வாறு வெளியேற்றுவது? யாரைக்கொண்டு இதனை நிறைவேற்றலாம் என்று எண்ண்ணியிருந்த நிலையில் அதற்கு விடுதலைப்புலிகளையே அவர் தெரிவு செய்தார். இந்திய இராணுவத்திற்கு எதிராக போர்க்கொடி தொடுக்க பெருமளவு ஆயுதங்கள் வழங்கி உதவினார். இந்திய இராணுவத்துக்கும் – விடுதலைப்புலிகளுக்கும் நிரந்தர பகை உருவாக இதுவே காரணமாக அமைந்து. அமைதிப்படை என்கின்ற போர்வையில் அராஜகப்படையாக மாறியது இந்திய இராணுவம். இதன்போது விடுதலைப்புலிகள் சார்பில் யோகரண்டம் யோகி, அன்ரன் பாலசிங்கம், தளபதி கிட்டு, டொமினிக் போன்றோர் பிரேமதாஸாவுடனான இரகசிய சந்திப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறிருக்கும் நிலையில் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கைதுசெய்வதற்கு செக்மெட் என்ற படைநடவடிக்கையை மேற்கொண்டது. இருந்தபோதிலும் மணலாற்றுக்காட்டுப்பகுதியிலிருந்த பிரபாகரனை பிடிக்கமுடியவில்லை. அமைதிப்படையை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு விடுதலைப்புலிகள் ஆயுத அஹிம்சை வழியிலும் போரிட்டனர். இந்திய இராணுவத்தை வெளியேற்ற திலீபன்



உண்ணாநோன்பிருந்தார். பிரேமதாஸாவின் தலைமையில் ராஜீவ்காந்தியை கொலைசெய்வதற்கு திட்டமிட்டு, பிரபாகரன் அதற்கு ஒத்துக்கொண்டதன் காரணமாக, ராஜீவ்காந்தியின் கொலையும் நடந்தேறியது. நிரந்தரமான தீர்வை தமிழினத்திற்கு பெற்றுத்தருவதாகவே இந்தியரசு இலங்கையில் காலடி எடுத்துவைத்தது. அதனையும் பிரேமதாஸாவின் அரசு தவிடுபொடியாக்கியது. அதன் பின்னர் அமைதிப்புறாவோடு வந்த சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் பிரபாகரனோடு பல்வேறு கடிதங்கள் மூலமாக தொடர்பினை ஏற்படுத்தியிருந்தார். சந்திரிக்க அரசின் தந்திர நடவடிக்கைளை அறிந்துகொண்ட பிரபாகரன், இலங்கை அரசிற்கு பாரிய நெருக்கடிகளைக்கொடுத்திருந்தார். ஆயுத கட்டமைப்பில் தனது திறமையினை வெளிப்படுத்திய பிரபாகரன் தமிழினம் முற்றுமுழுதான விடுதலையைப்பெறவேண்டும் அதுவரை போராட்டம் தொடரும் என சவால் விடுத்தார்.

பொருளாதாரத்தடைகளை நீக்குவதாகவும், இடைக்கால நிர்வாகங்களை வழங்குவதாகவும் இவ்வாறான பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கிய சந்திரிக்கா, அமெரிக்காவிடம் சென்று விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் எனவும் முத்திரையிட்டார். இதன் விளைவாக விடுதலைப்புலிகளின் அமைப்பை சர்வதேசம் பயங்கரவாத அமைப்பு என முத்திரையிட்டது. இவ்வாறிருந்தும் விடுதலைப்புலிகளின் உக்கிர தாக்குதல் நடவடிக்கையினால் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இயலாத சந்திரிக்கரசு, மஹிந்தவிடம் ஆட்சியைக் கையளிக்கவேண்டிய சூழ்நிலைஏற்பட்டது. இக்காலகட்டத்தில் பாராளுமன்றத்தேர்தல் இடம்பெற்றது. அதில் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அமோக வெற்றிபெற்றார். விடுதலைப்புலிகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிற்கு வாக்களிக்கக்கோரியதாகவும், இதற்காக பெருந்தொகைப் பணத்தினை அவர்கள் வழங்கியதாகவும் UNP குற்றம் சுமத்தியது. இதேநிலையில் நல்லாட்சியை வழங்குவதாகவும் கூறிய மஹிந்தராஜபக்ஷஅவர்கள்இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தைகள் என இழுத்தடிப்புச்செய்ய முற்பட்டார். இதற்கும் நோர்வே அரசு தலைமை தாங்கியது.

அனைத்துப் பேச்சுக்களும் தோல்வியில் நிறைவடைந்தது. மாவிலாறில் மஹிந்த அரசு யுத்தத்தினை ஆரம்பித்து, சர்வதேச நாடுகளின் உதவியுடன் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தீவிரம் காட்டி தமிழினத்தின் மீதான தாக்குதலை மேற்கொண்டனர். இன்று அவரும் கூட ஆட்சியிலில்லை. மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நினைத்திருந்தால் தமிழ்மக்களுககு இலகுவான தீர்வினை பெற்றுக்கொடுத்திருக்க முடியும். இதற்கு அரசியல் யாப்பு தடையாக இருந்தது என்றனர். ஆனால் தற்பொழுது மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக செயற்படுகின்றார். இவர் தமிழ்மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதாக கூறிவருகின்றார். இது இவ்வாறிருக்க மஹிந்த ராஜபக்ஷவினது ஆட்சிக்காலத்தில் பல்வேறுபட்ட அரசியல்கொலைகள் இடம்பெற்றன. இலங்கையில் மாத்திரம் 33ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மஹிந்தவின் அரசில் இனப்பிரச்சினைக்கான தீர்வுதொடர்பில் எந்தவிதமான தீர்வுகளும் எட்டப்படவில்லை. 100நாள் வேலைத்திட்டத்துடன் களமிறங்கிய சிங்கள பேரினவாதக்கட்சிகள் மைத்திரிபால சிறசேனவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மீண்டும் சந்திரிக்கா அம்மையார் கைப்பற்றிக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஆகவே தொடர்ந்துவந்த அரசுகள் அனைத்தும் தமது சுயநல அரசியலில் தீவிரம் காட்டியதே தவிர, தமிழ் மக்களுக்கான தீர்வில் இழுத்தடிப்புப்போக்கினையே கடைப்பிடித்துவருகின்றன. பதவி முகங்களைக்கொடுத்து, தமிழ் அரசியல்வாதிகளை விலைக்குவாங்கலாம் என இந்த அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. அதற்கு ஒருசில தமிழ் அரசியல்வாதிகளும் உடந்தை. தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்று வாய்கிழியப்பேசியவர்கள் மைத்திரிபால சிறிசேன போடும் எலும்புத்துண்டங்களுக்கு அடிமையானவர்கள். ஆட்சி மாற்றம் தேவை என்றும் அதனால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என நம்பியே மைத்திரியின் அரசுக்கு வாக்களியுங்கள் எனக்கூறியது த.தே.கூட்டமைப்பு. ஆனால் இன்று தமிழின படுகொலைகள் அனைத்தும் உள்ளூர் விசாரணைகள் மாத்திரமெ எனக்கூறுகின்றது இந்த அரசு. சர்வதேச விசாரணை பொறிமுறைக்குள் இனப்படுகொலையாளி மஹிந்தவும், அரவது சகாக்களும் என முத்திரை குத்தப்பட்டிருக்கும் நிலையில் மஹிந்தவினைக் காப்பாற்றும் நோக்கிலேயே மைத்திரியின் அரசும் செயற்படுகின்றது. இவ்வாறான காலகட்டத்தில்தான் பாராளுமன்றத் தேர்தலொன்று இடம்பெறவிருக்கின்றது. இதன்போதும் கூட மீண்டும் போலியான வாக்குறுதிகளையே இந்த மைத்திரி அரசு தமிழ் மக்களுக்கு வழங்க முற்படுகின்றது. தமிழரசுக்கட்சியின் தலைவர்களையே மைத்திரியின் அரசு நேரடியாக அழைத்து சில வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது. மாகாணசபை அதிகாரங்களை முழுமையாகத் தருகிறோம். இனப்படுகொலையை முழுமையாகத் தீர்த்துவைக்கின்றோம். ஒற்றையாட்சியின் கீழ் தமிழ்மக்களுக்கான தீர்வுகள் சுமுகமாக முன்னெடுக்கப்படவேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்படும் என்று கூறி தமிழினத்தை மீண்டும் ஏமாற்றும் நடவடிக்கைளில் ஈடுபடுவார்கள். ஆசனங்களுக்காக மோப்பம் பிடித்த தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களிடமும் போலியான வாக்குறுதிகளையே வழங்கவேண்டிய நிலைமைகள் உருவா கும்.

ஆரம்ப கட்டத்தில் தமிழ் மக்களுக்கான சலுகைகளை வழங்குவதாகக்கூறிய நிலையையே இதுவரை இடம்பெற்ற தேர்தல்களும் ஆட்சிமாற்றங்களும் எடுத்துக்காட்டுகின்றன. அதில் வித்தியாசம் கிடையாது. ஜனநாயக நாடு எனக்கூறிக்கொண்டு அராஜகமான முறையிலான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலைகள் கூட மைத்திரி அரசாங்கம் ஒரு திடகாத்திரமான அரசாக அமையும் பட்சத்தில் தமது பரம்பரையாக ஆட்சி இடம்பெறவேண்டும் என்பதையே அவர்கள் விரும்புவார்கள். பெரும்பான்மையான சிங்கள இனத்தவர்களிடமே இவர்களது அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறும். தென்னிலங்கையில் இருக்கக்கூடிய சிங்கள பேரினவாதிகள் ஒருபோதும் தமிழ்மக்களுக்கு சிறந்த தீர்வினை அல்லது வடகிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையை வழங்கப்போவதில்லை. இந்தியா, நோர்வேயின் மத்தியஸ்தமும் ஒரு பகடைக்காயாகவே அமையப் போகின்றது. முள்ளிவாய்காலில் திரும்பிப்பார்க்காத சர்வதேசம் இனியொருபோதும் தமிழினத்தை திரும்பிப்பார்க்கப்போவதில்லை.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு இலட்சியத்தில் வாழ்ந்தால் மாத்திரமே எமது விடுதலையினை வென்றெடுக்கமுடியும். தமிழ் மக்களுடைய பிரச்சினையில் தீர்வுகாணப்படவேண்டும் என்று பல்வேறு தரப்பட்ட சர்வதேச நாடுகள் இலங்கையில் உள்நுழைந்தமைக்கான காரணம் அவர்களது தேசிய அரசியலை தக்கவைத்துக்கொள்வதற்காகவே. எதிர் வரும் காலங்களிலும் தமிழ்மக்களுக்கான சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் பின்னிற்கும். தற்பொழுது மைத்திரியினது அரசானது ஒரு வலுவான அரசாக இல்லாததன் காரணமாகவே வடகிழக்கு தமிழர்களுடைய வாக்குகளை பெற்றுக்கொள்தவற்காக போலியான வாக்குறுதிகளை வழங்கி செயற்படுகின்றார்களே தவிர, தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அல்ல. ஆகவே தமிழ்மக்களது போராட்டம் எங்கு தொடங்கியதோ அங்கு மீண்டும் உயிர் பெறுகின்றது எனலாம்.

மறவன்

# துருத்திக்கொண்டும் உறுத்திக்கொண்டும் இருக்கும் 'இலங்கை தமிழரசுக்கட்சி'யின் அம்மணம்! - அ.ஈழம் சேகுவேரா



'தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அங்கத்துவக்கட்சிகளில் ஒன்றாகிய இலங்கை தமிழரசுக்கட்சிக்கு 51 சதவீதமும், ஏனைய மூன்று கட்சிகளுக்கும் 49 சதவீதமும் வழங்கும் வகையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை மாற்றப்படவேண்டும். அவ்வாறு மாற்றப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலேயே, இலங்கை தமிழரசுக்கட்சி கையொப்பமிடும்!' இவ்வாறு ஒரு செய்தி, தமிழ் – சிங்கள புத்தாண்டு நாளன்று வலை உலாவியில் உலாவவிடப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று (ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட்) கட்சிகளினாலும் இணக்கம் காணப்பட்டு, அதன்பின்னர் இலங்கை தமிழரசுக்கட்சியிடம் முன்வைக்கப்பட்டுள்ள குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில்,

- **அனைத்து தேர்தல்களிலும் நான்கு கட்சிகளுக்கும் சமமான ஆசனப்பங்கீடு.**
- **தனியொரு கட்சியின் (இலங்கை தமிழரசுக்கட்சியின் வீடு) சின்னத்தை தவிர்த்து. நான்கு கட்சிகளும் 'பொதுவான சின்னம்' ஒன்றின் கீழ் தேர்தல்களில் போட்டியிடுதல். அல்லது நான்கு கட்சிகளும் தமக்கென்று கொண்டிருக்கக்கூடிய சின்னங்களை சுழற்சி முறையில் பயன்படுத்துதல்.**
- **கூட்டமைப்பின் தலைவர் பதவியை சுழற்சி முறையில் வகித்தல்.**
- **ஏதேனும் ஒரு கட்சியின் உறுப்பினரை மற்றுமொரு கட்சி ஆள்பிடிப்புச்செய்ய முடியாது. அவ்வாறு ஆள்பிடிப்பு நடைபெறுமாயின் அடுத்துவரும் பன்னிரண்டு வருடங்களுக்கு கட்சி மாறிய குறித்த உறுப்பினர் அனைத்து வகையான தேர்தல்களிலும் போட்டியிட முடியாது.**

என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்ததாக அறியமுடிகின்றது.

குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில், இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களுடன் பேசியே, தமது கட்சியின் முடிவை கூறமுடியும் என்று அக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தெரிவித்திருந்த நிலையில், தேர்தல்களில் ஆசனப்பங்கீடு உட்பட அனைத்து விடயங்களிலும் தமிழரசுக்கட்சிக்கு 51 சதவீதம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இணங்கும் பட்சத்திலேயே புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்று கட்சியின் சிரேஸ்ட தலைவர்கள் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் கூடிப்பேசி முடிவெடுத்துள்ளதாகவும், இதுவே தமது கட்சியின் நிலைப்பாடெனவும் தெரிவித்து குறித்த செய்தி கசியவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னைய நாள்களில் எல்லாம் கசியவிடப்பட்டுள்ள உப்புச்சப்பற்ற தகவல்கள், முகம் முகவரியற்ற செய்திகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து, முந்திக்கொண்டு அறிக்கை போர் தொடுத்துவந்த இலங்கை தமிழரசுக்கட்சியினர், 51க்கு49 சதவீதம் செய்தி தொடர்பில் மௌனம் சாதிப்பதிலிருந்து, 'சதவீத பங்கீடு' அவர்களின் மெய்நிலைப்பாடு என்பது புலனாகின்றது. இன்னுமொரு விடயத்தையும் நீங்கள் இங்கு கவனத்தில், கொள்ளுதல் வேண்டும். 'தமது கட்சியின் நிலைப்பாடு இதுதான், இன்னதுதான்' என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கவும் திராணியற்றுள்ள இலங்கை தமிழரசுக்கட்சியினர், 'வீட்டுக்கு ஒரு பிள்ளையை விடுதலைப்போருக்கு, அதுவும் ஆயுதப்போராட்டத்துக்கு உவந்தளித்துள்ள தமிழ் சமுகத்துக்கு' தலைமை கொடுக்கப்போகின்றார்களாம்? சுயமரியாதைக்காகவும், அரசியல் உரிமைக்காகவும் ஒப்பற்ற தியாகங்களை செய்துள்ள தமிழ் தேசிய குடியினத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிவந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை 'பங்கு வர்த்தக கம்பனி'யாக மாற்றியிருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் 51க்கு49 சதவீத அறிவிப்பை முன்னிறுத்தி சில கேள்விகள்!

**முதலாவதாக:**

சிறீலங்கா இனவெறி பாசிஸ்ட்டுகளிடமிருந்து தன்னாட்சி அதிகார அலகை வலியுறுத்தி அறுபது வருட காலத்துக்கும் மேலாக போராடிக்கொண்டிருக்கிற தமிழினத்தை மெய்யாகவே பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரதிநிதிகளா இவர்கள்? என்ற கேள்வியே பெருத்த ஐயமாக–அச்சுறுத்தலாக தொக்கு நிற்கின்றது. மத்திய அரசிடம் 'அதிகாரப்பகிர்வு, சமத்துவம், சமவாட்சி' தொடர்பில் கோருவதற்கு இவர்களுக்குஎன்னலாயக்கு இருக்கிறது? அதைத்தர மறுக்கும் மத்திய அரசை விமர்சிப்பதற்கு இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? முதலில் இவர்கள் தமது கோவணத்தை பழுது பார்க்கட்டுமே! முதலில் கட்சிக்குள் அதிகாரப்பகிர்வுக்கு பாழாய்ப்போன மனசு இளகி இடம்கொடுக்கட்டும். அதன்பின்னர் நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வு பற்றிப்பேசலாம்.

இந்த நான்கு கட்சிகளும் (இலங்கை தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட்) தமக்குள் 'அதிகாரப்பகிர்வுக்கு, சமமான வளப்பங்கீடுக்கு' தயாரில்லாத நிலையில், இவர்களா மத்திய அரசிடம் மல்லுக்கட்டி தமிழ் தேசிய குடியினத்துக்கு 'அரசியல் தீர்வு, சமவாட்சி, விடுதலை'யை பெற்றுக்கொடுக்கப்போகின்றார்கள்? இன்னும் எத்தனை காலத்துக்கு தமிழினம் இவர்களை நம்பிக்கொண்டிருக்கப் போகின்றது. 'பட்டு வேஷ்டி கனவில் இருந்தால் கட்டியிருக்கிற கோவணமும் களவு போவது, அன்றி உருவப்படுவது நிச்சயம்!'

**இரண்டாவதாக.**

தனிச்சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பாளர்களால், இலங்கை நாட்டின் தேசிய குடியினங்களில் ஒன்றாகிய தமிழினத்தின் மொழி, கலை, கலாசாரம், மரபுரிமை எல்லாமே அத்துமீறப்பட்டு சிதைக்கப்பட்டு, அந்த இனம் தனது சுயத்தை சடுதியாக தொலைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் இவர்களுக்கோ, தமிழினம் தனது சுயத்தை தொலைத்துக் கொண்டிருப்பது தொடர்பில் எவ்வித சலனமோ சஞ்சலமோ இருப்பதாகத்தெரியவில்லை. மாறாக தத்தமது கட்சியின் சுயத்தை பராமரிப்பதிலும், கட்சியை வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலுமே தமது முழுக்கவனத்தையும் செலுத்திவருவதையே அவதானிக்க முடிகின்றது. மொத்தத்தில் இங்கு கட்சியை பாதுகாக்க நபர்கள் உண்டு. மக்களை பாதுகாக்க யார் உளர்?

**மூன்றாவதாக.**

தனி மனித உரிமைகள் ஆகட்டும். ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் கூட்டு உரிமைகள் ஆகட்டும், உரிமைகள் மறுக்கப்படும் போது, அந்த உரிமைகளுக்காக புவிப்பிரபஞ்சத்தில் உயிர்க்கொடைகளைக்கூட செய்துள்ள குடியினம் தமிழ்த்தேசியக்குடியினம்!

ஒருமில்லி செக்கன்கூட மக்கள் நலன் – தேசிய பாதுகாப்பைத்தவிர வேறு எவற்றையும் முன்னிறுத்தி கற்பனை செய்து பார்க்காத, அக்கணமே உயிரை மாய்த்துக்கொள்ளும் 'சயனைட் குப்பிகள்' சதா கழுத்திலாட அக்கினிக்குஞ்சுகள் உலாவிய வீரம் விளைந்த நிலம்: தமிழ் நிலம்! இரத்தச்சேறாகிக்கிடக்கும் அத்தகையதொரு நிலத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியினர், 'ஆசன ஒதுக்கீடு உட்பட 51 சதவீத பங்கீடு' என்று கூச்சநாச்சமின்றி சுட்டிக்காட்டி கேட்டிருப்பது, அதாவது 'கந்தகப்புயல்கள் அடித்த தேசத்தில் கதிரைகள் கேட்பது', அவர்கள் தமது மானம் காக்க கட்டியிருந்த கடைசி கோவணத்துண்டையும் கழற்றிப்போட்டுவிட்டு சந்தி சிரிக்க நின்றுகொண்டிருக்கும் செயலுக்கு ஒப்பானதாகும்.

**நான்காவதாக.**

2009ம் வருடத்துக்குப்பின்னரான இந்த ஆறு வருட காலங்களில் சிவில், நிர்வாகத்தில் இராணுவத்தலையீடுகள், பௌத்த மயமாக்கல், பொதுமக்களின் அமைதிக்கு ஊறுசெய்விக்கும்–பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுவிக்கும் இராணுவ வல்வளைப்புச்சூழமைவுகள், காணி களவு, இயற்கை–கனியவளச்சுரண்டல்கள், சட்டவிரோத காடழிப்புகளின் ஊடே இடம்பெறும் தமிழர் இனவிகிதாசாரத்தை சீர்குலைக்கும் குடியேற்றங்கள், இவ்வாறு தமிழ் மக்களின் நெஞ்சை அழுத்தும், குரல்வளையை நெரிக்கும் தவிர்க்க முடியாததும் அத்தியாவசியமானதுமான பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி 'சிவில் அமைப்புகள்' பலவும் தீவிரமாக போராடியே வந்திருக்கின்றன/வருகின்றன.

அரச பயங்கரவாதத்துக்கு எதிரான இத்தகைய கண்டன–கவனவீர்ப்பு–எதிர்ப்பு போராட்டங்களின் போதெல்லாம், கணக்கெடுப்புக்காக வேணும் தலைகாட்டாத இலங்கை தமிழரசுக்கட்சியினர், 'தாய்க்கட்சி–தலைமைக்கட்சி, தலைமை கொடுக்கப்போகின்றோம்' என்றவாறெல்லாம் பிதற்றிக்கொண்டிருக்கின்றனர். இவர்களை வருடத்தின் 'சரியான கொமெடியர்கள்' விருதுக்கு தெரிவுசெய்யலாமே தவிர, 'தலைமைத்துவம்' என்பதெல்லாம் இந்த கொமெடியர்களுக்கு எட்டாக்கனியே! இந்த 'ஸீரோ'க்கள் தம்மை 'ஹீரோ'க்களாக வைத்து தமிழ் சமுகம் கொண்டாட வேண்டும் என்று எதிர்பார்ப்பது 'நம்பர் வன்' முட்டாள்த்தனமாகும்.

இலங்கைத்தீவில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில், இன்னும் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு சிறீலங்கா அரசாங்கத்துக்கு பெரும் குடைச்சலாக இருக்கப்போகின்ற விவகாரம் 'கட்டாயப்படுத்தப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர்' பிரச்சினையாகும். இந்தப்பிரச்சினை தொடர்பிலான போராட்டங்களுக்கு சிறு துரும்பைத்தானும் தூக்கிப்போட்டு, போராட்டத்தின் உயிர்ப்பை நீர்த்துப்போகவிடாமல் வைத்திருக்க கையாலாகாதவர்கள், 51க்கு49 என்று பேரம் பேசுவது நகைப்பாக இருக்கிறது. அதிலும் தமிழ் மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் ஏதாவது ஒன்றில், சிறீலங்கா அரசுடன் இத்தகைய பேரத்தைப்பேசி கிடுக்குப்பிடி போடுவதற்கு வக்கற்றவர்கள், கூட்டமைப்புக்குள் பேரம் பேசியிருப்பது இவர்கள் 'சந்தை கடையும் – மளிகை கடையும்' நடத்துவதற்கே தகுதியானவர்கள் என்பதை, அப்படியே அப்பட்டமாக படம் பிடித்து காட்டுகின்றது.

**ஐந்தாவதாக.**

"சுன்னாகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிலத்தடி நீரில் எண்ணெய்(கழிவொயில்) கலந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் கிணற்று நீரை குடிப்பது தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள்–பிரச்சினைகள்தொடர்பில், இத்தனைக்கும் "தனியொரு மனிதனுக்கு நீரில்லையேல் ஜகத்தினையும் அழித்திடுவோம்" என்று உறுதியேற்று, யாழ்ப்பாணம் மாவட்ட கல்விச்சமுகமும், மருத்துவர்கள் சமுகமும் 'எதிர்கால சந்ததியினரின் இருப்பையும்அவர்களுக்குநிகழ்காலத்தில் சீவிப்பவர்கள் கையளிக்கப்போகும் சூழலையும்' முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் விழிப்புணர்வு மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கும் சூழலில், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா இத்தனைக்கும் இவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். 'சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளின் கிணற்று நீரை குடிக்கலாமா? என்று கூடத்தேவையில்லை, அந்த நீரில் உடுபிடவைகளைத்தானும் அலசலாமா? சலவை செய்யலாமா? (துவைக்கலாமா) என்றுகூட மக்களுக்கு பொறுப்புக்கூறாமல் இருந்துவருவதில் ஏதோவொரு மர்மம் ஒன்று உள்ளது.

'தான் யாழ்ப்பாணம் மாவட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரே இல்லை' என்பது போல், எவ்வித சலனமும் சமயோசிதமும் இன்றி அயோக்கியதனமாக இருந்துவரும் மாவை.சேனாதிராசா, ஏன் சுன்னாகம் கழிவொயில் நீர் பிரச்சினையிலும் முந்திக்கொண்டு 51 வீதத்தை எடுத்துக்கொண்டு மக்களுக்கு பொறுப்புக்கூறியிருக்கலாமே? தமிழ் மக்களின் இருப்புக்கு – பாதுகாப்புக்கு – வாழ்வுரிமைக்கு சவால் மற்றும் அச்சுறுத்தல் விடுவிக்கும் பிரச்சினைகள் சம்பவங்களின் போதெல்லாம் 'பூச்சியம் மைன்ஸ்' (–0) வீதத்தை எடுத்துக்கொள்வோம், ஆனால் 'பாராளுமன்ற கதிரை' என்று மட்டும் வந்துவிட்டால் 'ஹன்ட்ரெட் பிளஸ்' (+100) வீதத்தையும் வாரிச்சுருட்டிக்கொள்வோம் என்றால் என்னங்க இது நியாயம்?

**ஆறாவதாக.**

எல்லாவற்றிலும் 51 சதவீதம் என்று கேட்டிருப்பதானது சாதாரணமான விடயமல்ல. அதில் மிகப்பெரிய நஞ்சுத்தன்மை இருக்கிறது. விஷம் ஆழமாக இறங்கியிருக்கிறது. அது என்னவென்றால் கூட்டமைப்புக்கென்று மாவட்ட குழுக்களை நியமித்தால் என்ன, இளைஞர் அணியை கட்டமைத்தால் என்ன, தேர்தல் நியமனக்குழுவை உருவாக்கினால் என்ன, நிதிக்குழுவை அமைத்தால் என்ன? இவை எல்லாவற்றிலும் இலங்கை தமிழரசுக்கட்சியினர் தமது பெரும்பான்மையை தக்க வைத்துக்கொள்வதற்கு நரித்தனம் பார்த்துள்ளனர். எடுகோளாக: 'கூட்டமைப்பின் பெயரால்' புலத்திலிருந்தோ அன்றி வேறு ஏதேனும் வழிமுறைகளினூடோ ஒரு தொகை நிதிவரவு கிடைக்கப்பெற்றால், அத்தொகையில் பெருந்தொகையை களவாடும் கள்ளத்தனமும் கொள்ளைப்புத்தியும் இதில் கூடவே இருக்கின்றது.

**ஏழாவதாக.**

ஈழதேசத்தின் ஆத்மா, எங்கள் இதயத்தின் இயக்கம், எமது விடுதலை வானின் பேரொளி, தமிழ் தேசிய இனத்தின் பேராண்மை 'தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்' அவர்களையும், 'விடுதலைப்போராட்ட இயக்கம்' ஆகிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அண்மைக்காலமாக இலங்கை தமிழரசுக்கட்சியினர் 'பயங்கரவாதிகள்' என்று பயங்கரமாக விமர்சித்து வருகின்றனர். இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன், இந்நாள் தலைவர் மாவை.சேனா திராசா, அக்கட்சியின் நிகழ்கால நீலன் திருச்செல்வம் சுமந்திரன், சுமந்திரன் தத்தெடுத்திருக்கும் வாரிசு கேசவன் சயந்தன் (வடமாகாண சபை உறுப்பினர்), அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களில் ஒருவராகிய அன்டனி ஜெகநாதன் (வடமாகாணசபை உறுப்பினர்) என்று, ஈழ விடுதலைப்போராட்டத்தை விமர்சிப்பவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

12ஆம் பக்கம் பார்க்க...

# பிராந்தியச் செய்திகள்



## புங்குடுதீவு மாணவி படுகொலைக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கண்டனம்

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியாவின்படுகொலைக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கம் புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட மாணவி சி.வித்தியாவிற்கு வணக்கம் செலுத்தியுள்ளது. பழைய மாணவர் சங்கம் சார்பாக அதன் செயலாளர் பொன்.காந்தன் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி சிவலோகநாதன் வித்தியா மிக மோசமான முறையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது கண்டு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க சமூகமாகிய நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். எமது சமுதாயத்தில் எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழக்கூடிய ஒரு மாணவியின் எதிர்காலம் திட்டமிட்டு இரக்கமற்ற மிருகத்தனமான சிந்தனை உள்ளவர்களால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

இது இருக்கின்ற ஏனைய மாணவ சமுதாயத்தின் மத்தியில் குறிப்பாக மாணவிகள், பெற்றார்கள் மத்தியிலும் அச்சத்தையும் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் கல்வியில் முக்கிய அடையாளமாக கருதப்படும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்தகையதொரு மிலேச்சத்தனமான சம்பவம் இடம்பெற்றிருப்பது எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. எமது மாணவர்கள் எமது சமூகத்தின் மிகப் பெரும் சொத்துக்கள். எமது சமுதாயம் பெற்றார்கள் மாணவர்களை சுற்றி ஒரு பெரும் கனவை வளர்த்து வைத்துள்ளார்கள். அவர்கள் எமது சமுதாயத்தை புகழ்மிக்கதாக வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்த்து மாணவர்களுக்காக அல்லும்பகலும் பாடுபடுகின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் புங்குடுதீவில் மாணவி சி.வித்தியாவிற்கு ஏற்பட்டுள்ள கதி கவலை அளிக்கின்றது. இந்த நிலைக்குஉள்ளாக்கிய குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகம் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம். புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கும் பாடசாலை சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம் என அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆற்றைக் கடக்க முற்பட்டவர் முதலைக்கு இரையாகி பலி



மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலவெட்டுவான் ஆற்றைக் கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் முதலைக்கு இரையாகி பலியாகியுள்ளார். ஈரளக்குளம் வாத்தியின்வெட்டை என்ற இடத்தைச்சேர்ந்த கந்தையா பத்மநாதன்(54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் மற்றுமொருவருடன் வந்தாறுமூலையில் உள்ள தனது உறவினரின் வீட்டுக்கு சென்ற போது ஆற்றைக்கடப்பதற்கு தோனி இல்லாமையினால், இருவரும் ஆற்றை நீந்திக் கடக்க முற்பட்டபோதே இவரை முதலை கடித்துள்ளது.

முதலை கடித்த நபரின் சடலத்தை பொலிசார் அதிகாரிகள், உறவினர்கள் என பலரும் தேடிவருகின்றனர். மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இவருடன் ஆற்றைக்கடந்த மற்றையவர் அதிஷ்டவசமாக கரை சேர்ந்துள்ளார். ஈரளக்குளம் போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் மக்கள் மயிலவெட்டுவான் ஆற்றினூடாக பாதுகாப்பற்ற மீன்பிடித் தோனியில் பயணிப்பதாகவும் மாலை வேளையில் போக்குவரத்து தடைப்பட்டு இருப்பதனால் சிலர் ஆற்றை நீந்திக்கடக்க முற்படுவதாகவும்,மேலும் பலர் மறுநாள் காலையிலேயே செல்லவேண்டியுள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## பாதை திருத்தி தருமாறு கோரி தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




டயகம நகரத்தில் இருந்து சந்திரிகாமம் தோட்டத்துக்கு செல்லும் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான பாதை 20 வருடங்களாக மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதால் இப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இப்பாதையை செப்பனிட்டு தருமாறு மலையக அரசியல்வாதிகளிடம் அறிவித்த போதிலும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையென இம்மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பாதையை செய்து தருமாறு கூறி காலை 10 மணிமுதல் 12 மணிவரை 30 இற்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். பாதை மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் இப்பாதையில் வாகனங்கன் செல்லமுடியாமல் உள்ளது.

இதன் காரணமாக டயகம நகரத்தில் இருந்து இத்தோட்டத்துக்கு முச்சக் கரவண்டி செல்வதாக இருந்தால் 600 ருபா தொடக்கம் 800 ருபாவரை மக்களிடம் பெறப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இப்பாதையில் பஸ் சேவை இன்மையால்மாணவர்கள்பாடசாலைக்கு செல்லும் போது சுமார் 10 கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலமை உள்ளது. எனவே இப்பாதையினை உடனடியாக செய்துதருமாறு கோரியே இம்மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துக்கொண்டதாக ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

## மூதூர், படுகாடுப் பகுதியில் விவசாயிகள் வேளாண்மை செய்ய தடை



காணி உரிமை தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கும் வரை சர்ச்சைக்குரிய மூதூர், படுகாடு பகுதியிலுள்ள காணியில் விவசாயிகள் நெல் வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அதிகாரிகளினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டம் மூதூர், படுகாடு பகுதியிலுள்ள ஒரு பகுதி வயல் நிலங்களின் உரிமை தொடர்பாக தமிழ் மற்றும் சிங்கள விவசாயிகளுக்கிடையில் தொடர்ந்து சர்ச்சை நிலவுகின்றது. இந்தக் காணி உரிமை தொடர்பாக ஆராய்வதற்காக விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்குமிடையில் படுகாடு வயல் பகுதியில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் தீர்வுகள் எதுவும் எட்டப்படாததையடுத்து அதிகாரிகளினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மூதூர் மற்றும் சேருவில பிரதேச செயலக பிரிவுகளின் எல்லையாக படுகாடு பகுதியுள்ள போதிலும் அதன் நிர்வாகம் மூதூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டது. போர் காலத்தில் தமிழ் விவசாயிகள் அந்த பகுதிக்கு செல்ல முடியாத நிலையில் வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு வந்த சிங்கள விவசாயிகள் தொடர்ந்தும் வேளாண்மையில் ஈடுபட்டு வருவதையடுத்தே தங்களின் காணி உரிமை மறுக்கப்படுவதாக தமிழ் விவசாயிகள் கூறுகின்றார்கள். காணி உரிமை தொடர்பான சட்டரீதியான ஆவணங்கள் அனைத்தும் தங்களிடம் இருப்பதாகவும் அவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காணிகளில் தொடர்ந்தும் வேளாண்மையில் ஈடுபட்டுவருவதால் அரச முடிக்குரிய காணி என்பதில் அந்த உரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என சிங்கள விவசாயிகள் தரப்பு வாதிடுகின்றது. இந்தக் காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தர வேண்டும் என கோரி சில நாட்களுக்கு முன்னர் தமிழ் விவசாயிகள் மூதூர் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி விவசாய பிரதிநிதிகள் (தமிழர்-2, முஸ்லிம்-1, சிங்களவர் - 2 ) ஸ்ரீ, பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அதிகாரிகள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கூட்டத்தில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் கூறுகின்றார்.

## தற்கொலைக்களமாக மாறியுள்ள புஸ்ஸல்லாவ

இலங்கையில் அதிகமான தற்கொலைகள் இடம்பெறும் இடமாக புஸ்ஸல்லாவ பிரதேசம் மாறியுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் இரட்டைப்பாதை அட்டபாகை தோட்டம் 01, வகுகப்பிட்டிய சவுக்குமலை தோட்டம் 01, புஸ்ஸல்லாவ பிளக்போரஸ்ட் தோட்டம்02, புஸ்ஸல்லாவ நகரம் 02, புஸ்ஸல்லாவ ரொத்சைல்ட் தோட்டம் 02, உட்பட 8 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 07 பாடசாலை மாணவர்களும் வர்த்தகர் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் 09வது தற்கொலை புஸ்ஸல்லாவ ரொத்சைல்ட் தோட்டம் ஓ.ஆர்.சி பிரிவில் இடம்பெற்றுள்ளது. 63 வயதையுடைய முத்தையா குமாரசாமி என்பவர் வீட்டில் யாரும் இல்லாத வேலையில் வீட்டு கூரையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என புஸ்ஸல்லாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் குறித்த தோட்ட தொழிலாளியாக பணிபுரிந்து ஓய்வு பெற்று மனைவியையும் இழந்த நிலையில் தனது கடைசி மகனுடன் வாழ்ந்து வந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. புஸ்ஸல்லாவ வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர்களிடம்கையளிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை புஸ்ஸல்லாவ பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றனர்.

02பக்கம் தொடர்ச்சி...

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நினைவுத்தூபி அமைப்பதா? என்ற கேள்விதமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்குள் இருக்கலாம். பயங்கரவாதிகள் எனக்கூறியவர்களுக்கு எவ்வாறு தூபி அமைக்கலாம் என தமிழ்க்கட்சிகளின் ஏனைய உறுப்பினர்கள் உரையாடிக் கொள்ளாமலுமில்லை. தற்பொழுது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சில சந்தர்ப்பங்களில் குறைத்துப்பேசியிருக்கின்றார். அறவழி மற்றும் அஹிம்சை போராட்டங்களை நடாத்திய தலைபழுத்த அரசியல்வாதிகள் சற்று சிந்திக்கவேண்டும். பிரபாகரனின் போராட்டத்தின் உறுதியே தமிழினம் என்ற ஒன்று இலங்கையில் வாழ்கின்றது என்பதை சர்வதேச மட்டத்தில் எடுத்தியம்பக்காரணமாக அமைந்தது.

பிரபாகரனின் தலைமையை விரும்பாத சர்வதேச நாடுகள் தமது தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படும் என்கின்ற காரணத்தினால் ஒட்டுமொத்தமாக இணைந்து போராட்டத்தினை மழுங்கடிப்புச்செய்தனரே தவிர, வேறொன்றுமில்லை. ஆயுதப்போராட்டம் பின்னர் அஹிம்சை வடிவில் உருவெடுத்து பாராளுமன்றிற்கு உங்களை உறுப்பினர்களாக அனுப்பிவைத்ததும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே. அதனால்தான் இன்று அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்கின்ற பெயரில் தமிழினத்திற்காக பல்வேறான விடயங்களை சாதிக்கமுடிகிறது. இல்லையேல் தமிழினம் இலங்கையில் இருந்த வரலாறே அழிக்கப்பட்டிருக்கும். நிச்சயமாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழின விடுதலைக்காக போராடி தமது உயிரை மாய்த்துக்கொண்ட மாவீரர்களுக்கும், யுத்தத்தின்போது கொல்லப்பட்ட பொதுமக்களுக்குமானதொரு நினைவுத் தூபியினை அமைப்பதற்கான அங்கீகாரத்தினை பாராளுமன்றில் பெறவேண்டும். மாவீரர் நினைவுகள் அனுஷ்டிக்கப்பட்டால் தனிப்பட்ட ரீதியிலே கைதுசெய்யப்படுகின்றார்கள். அவர்களையும்பயங்கரவாதிகள்என சிறையில் அடைக்கின்றார்கள். இவ்வாறான நிலைமை ஏன் இன்னமும் தொடரவேண்டும்.

அரசுடன் இணைந்துபல திட்டங்களை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. இவற்றினை சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு செயற்படுவது ஆராக்கியமானதாகும். தமிழ் மக்களது உரிமைப்போராட்டம் நியாயமானது. அதனது நடவடிக்கைகளே தற்பொழுது தமிழினம் தலைநிமிர்ந்துவாழ அஸ்திவாரம் இட்டுள்ளது. இதனைக்கருத்திற்கொண்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமது செயற்பாடுகளைமேற்கொள்ளவேண்டும். அவ்வாறில்லையேல் மீண்டும் ஆயுதப்பொறிமுறை தூண்டப்படுவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே காரணமாக அமைந்துவிடும். நினைவுத் தூபியினை அமைப்பதற்காக அனைத்து தமிழ் உறவுகளும் முன்வந்து செயற்படவேண்டும். அதுவே காலத்தின் தேவையாகும்.




## தனுஷிற்கு நன்றி தெரிவித்த சமந்தா?



தனுஷ் நடிப்பில் சமீபத்தில் வந்த அனேகன் திரைப்படம் கலவை யான விமர்சனங்களை சந்தித்தது. இப்படம் வெற்றியா? தோல்வியா? என இன்று வரை ஒரு பேச்சு இருந்து வருகிறது. இந்நிலையில் இவர் தற்போது நடித்து வரும் VIP2 படத்தில் சமந்தா இவருடைய மனைவியாக நடிக்கிறார்.

இது குறித்து தன் டுவிட்டர் பக்கத்தில் சமந்தா 'எனக்கு இப்படி ஒரு நல்ல கதாபாத்திரத்தை கொடுத்த தனுஷிற்கு நன்றி' என டுவிட் செய்துள்ளார்.

## இந்த புகைப்படத்தில் இருப்பது சிவகார்த்திகேயன் தானா?



நடிகர் சிவகார்த்திகேயன் தமிழ் சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரமாக வலம் வந்துகொண்டிருக்கிறார். இவரின் அடுத்த படமான ரஜினி முருகன் வருகிற ஜூலை மாதம் 17ம் திகதி உலகம் முழுவதும் வெளியாக உள்ளது. இப்படத்தில் ஒரு பாடலில் சிவகார்த்திகேயன் பிச்சைக்கார வேடம் போட்டுள்ளதாக தகவல் உ'லா வருகிறது.

இந்நிலையில் Facebook, Twitter தளத்திலும் சிவகார்த்திகேயன் பிச்சைக்கார வேடமிட்டதாக ஒரு புகைப்படம் பரவி வருகிறது. தற்போது வரை இதில் இருப்பது சிவகார்த்திகேயன் தானா என்று படக்குழு வாய் திறக்கவில்லை.

## ஜி.வி. பிரகாஷுக்காக யுவன் செய்த விஷயம்



தமிழ் சினிமாவில் தற்போதைய இசையமைப்பாளர் ஒற்றுமை ரொம்பவே வியக்கத்தக்க விஷயமாக இருந்து வருகிறது. பல பிரபலமான இசையமைப்பாளர்கள் சக போட்டியாளர்கள் இசையில் நட்பு ரீதியாக பாடி வருவது வழக்கமான விஷயமாக மாறி வருகிறது. யுவனின் பிரியாணி படத்துக்காக விஜய் ஆண்டனி, தமன், ஜி.வி. பிரகாஷ் போன்றவர்கள் ஒரு பாடலை பாடி கொடுத்தனர்.

அதே போல் தற்போது ஜி.வி. பிரகாஷ் நடித்து வரும் த்ரிஷா இல்லனா நயன்தாரா படத்துக்காக சமீபத்தில் யுவன் ஒரு Peppy பாடல் ஒன்றை பாடியுள்ளார். இதை இரண்டு இசையமைப்பாளர்களும் தங்களின் ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளனர்.

## ஆர்வம் காட்டும் நயன்தாரா



தமிழ் சினிமாவில் அறிமுகமாகி சில விளம்பரங்களில் நடித்து வந்த நயன்தாரா காலப்போக்கில் படங்களில் நடிப்பதில் மட்டும் ஆர்வம் காட்டி வந்தார். தற்போது மீண்டும் விளம்பரங்களில் நடிக்க அதிகம் கவனம் செலுத்த இருக்கிறாராம். சமீபத்தில் ஒரு நகைக் கடையின் விளம்பரத்தில் நடிக்க நயன்தாரா ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்த விளம்பரத்துக்காக நயன்தாராவுக்கு ரூ.5 கோடி வரை சம்பளம் பேசப்பட்டிருக்கிறதாம். 3 படத்தில் நடித்தால் கிடைக்கும் சம்பளம் ஒரே விளம்பரத்தில் கிடைக்கிறது. இந்த விளம்பரத்துக்கு 15 நாள் கால்ஷீட் (Call Sheet) கொடுத்திருக்கிறாராம்.

## குறளரசனுக்கு ஆதரவாக பேசிய அனிருத்



சிம்புவின் நடிப்பில் நீண்ட காலமாக படப்பிடிப்பு முடியாமலே போய் கொண்டிருக்கும் படம் இது நம்ம ஆளு. இப்படத்தில் இன்னும் இரண்டு பாடல்கள் மட்டுமே மீதமுள்ளதாம். இந்நிலையில் படத்தில் குறளரசனுக்கு இசையமைக்க தெரியவில்லை, அனிருத் தான் முழு உதவியும் செய்தார் என்ற தகவல் பரவிவந்தது.

இதை கேள்விப்பட்ட குறளரசன் தயவு செய்து இது மாதிரி பொய்யான விஷயத்தை பரப்பாதீர்கள் என்று சமீபத்தில் தெரிவித்தார். இதுநாள் வரை அனிருத்திடம் இருந்து எந்தவித மறுப்பும் வரவில்லை. இதனால் சந்தேகம் வலுத்தது. இந்நிலையில் இன்று அனிருத் குறளரசனுக்கு ஆதரவாக பேசியுள்ளார் நான் இது நம்ம ஆளு பாடல்கள் முழுவதும் கேட்டுள்ளேன், நன்றாக வந்து இருக்கிறது என்றும் தேவையில்லாத வதந்திகளை நம்பாதீர்கள் எனவும் கூறியுள்ளார்.

## ஹிட்லரான விஜய் ஆண்டனி



இதுவரை சீரியஸ் ரோல்களில் மட்டுமே நடித்து வந்த விஜய் ஆண்டனி, சமீபத்தில் வெளிவந்த இந்தியா பாகிஸ்தான் படத்தின் மூலம் கொமடியாகவும் நடிக்க முடியும் என நிரூபித்துள்ளார். இப்போது பிச்சைக்காரன், சைத்தான் ஆகிய படங்களில் நடித்து வரும் அவர், அதன் பிறகு 'திருடன்' என்ற படத்தில் நடிப்பதாக கூறப்பட்டது.

ஆனால் இப்போது இந்த படத்தின் தலைப்பை 'ஹிட்லர்' என மாற்றியுள்ளனர். ஹிட்லருக்கும் இந்த படத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


## விஜய்-அஜித் ஒரே படத்தில் இணையும் கதை ரெடி



தமிழ் சினிமாவில் சில விஷயங்கள் நடப்பது சாத்தியமே. இல்லை. அதில் ஒன்று தான் விஜய்-அஜித் இருவரும் இணைந்து நடிப்பார்களா? என்பது தான். இருவருமே நடிக்க வந்த ஆரம்ப காலத்தில் சேர்ந்து நடித்தனர். ஆனால், அதன் பிறகு இவர்களுக்கு என பெரிய ரசிகர்கள் வட்டம் வந்தவுடன் இருவருமே போட்டியாளார்களாகவே கருதப்பட்டனர்.


இந்நிலையில் இவர்கள் இருவரையும் இணைத்து படம் இயக்க நான் ரெடி என வெங்கட் பிரபு முன்பே கூறியிருந்தார். தற்போது ஒரு பேட்டியில் இருவரையும் ஒரே படத்தில் இயக்குவதாக இருந்தால் விஜய் சார் ஹீரோ, அஜித் சார் வில்லன் என கூறியுள்ளார்.

## சொத்துக்களை களவாடிய இயக்குனர்



சினிமாவில் பொடி லாங்வேஜ் மூலம் நகைச்சுவையில் கலக்கி தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்தவர் கஞ்சா கருப்பு. இவர் சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் துறையைச் சந்தித்து ஒரு புகார் மனு கொடுத்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது, கடந்த ஆண்டு வேல்முருகன் போர்வெல்ஸ் என்ற திரைப்படத்தை கோபி இயக்க, நிர்வாக இயக்குனராக காளையப்பன் என்பவர் பணியாற்றினர். ஆனால் பணம் பற்றாக்குறையால் படம் பாதியில் நின்றுவிட்டது. இதனால் என்னிடம் இருவரும் பணம் கேட்டனர், நான் மறுத்ததால் என் மனைவியிடம் கேட்டுள்ளனர். என் மனைவியோ அவர்கள் கூறிய விஷயங்களை நம்பி பத்திரத்தை கொடுத்திருக்கிறார். அவர்கள் சொத்துக்களை எங்களிடம் இருந்து பெறும்போது என் மனைவி சங்கீதாவிடம் படம் வெளியானவுடன் பணத்தை கொடுத்து சொத்துக்களை மீட்டுக் கொடுப்பதாக எழுதிக் கொடுத்திருந்தனர். ஆனால் அவர்கள் இதுவரை திருப்பி கொடுக்கவில்லை, தற்போது என்னுடைய சொத்துக்களை காளையப்பன், கோபி ஆகியோர் வாங்கி வைத்துக்கொண்டு ஏமாற்றுகின்றனர். எனவே அவற்றை மீட்டுத் தர வேண்டும் என்று கோரியிருந்தார்.

## ஆமாம் நான் காதலிக்கிறேன் – தமன்னா



கொலிவூட், டொலிவூட், பொலிவூட் என மூன்று மொழிகளிலும் கலக்கி வருபவர் மில்க் பியூட்டி தமன்னா. சமீபகாலமாக இவர் நடிக்கும் படங்களை பற்றி செய்திகள் வருகிறதோ இல்லையோ, ஆனால் இவர் காதலில் விழுந்துள்ளார் என்ற செய்தி மட்டும் வந்து கொண்டே இருக்கிறது. ஆனால் மற்றவர்களை போல் இல்லாமல் இந்த வதந்தியை உடனே மறுத்திருந்தார் தமன்னா.

ஆனாலும் தமன்னாவிடம் பலர் காதல் பற்றி கேள்வி கேட்பது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தமன்னா, ஆமாம் நான் காதலிக்கிறேன். அதுவும் ஆழமாக காதலிக்கிறேன். ஆனால் நான் காதலிப்பது ஒரு ஆணை அல்ல என் வேலையை என்று தன் பதில் மூலம் வதந்திகளுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

## ஜெயம்ரவி – ஹன்சிகா நடிப்பில் விரைவில் ரோமியோ ஜுலியட்



இப்படத்தின் பாடல்கள் ஏற்கனவே பட்டி தொட்டியெல்லாம் பட்டையை கிளப்பி வருகின்றது. சமீபத்தில் தான் இப்படம் சென்ஸார் சென்றது. படத்தில் எந்த ஒரு காட்சியையும் நீக்காமல் படத்திற்கு சென்ஸார் குழு 'யு' சான்றிதழ் அளித்துள்ளது.

இதனால், படக்குழு மிகுந்த உற்சாகத்தில் இருந்து வருகிறது. இந்த கோடை விடுமுறையில் உங்களை குதூகலப்படுத்த வருகிறது ரோமியோ ஜூலியட்.


## இயக்குனர்களுக்கு பதிலடி கொடுத்த நித்யா மேனன்




ஓ காதல் கண்மணி படத்திற்கு தமிழ்நாட்டில் பல இளைஞர்கள் நித்யா மேனனின் ரசிகர்களாகி விட்டனர். இதுவரை கண்டுகொள்ளாத கமர்ஷியல் டைரக்டர்கள் இப்போது அவரிடம் கால் ஷீட் வாங்க கியூவில் நிற்கின்றனராம். ஆனாலும் சிலர் அவரின் உயரத்தை சுட்டிக்காட்டி, உயரமான நடிகர்களுடன் பாடல் காட்சிகளில் எப்படி நடிப்பீர்கள் என்கிறார்களாம். அதற்கு நித்யா மேனன், ராணி ருத்ரமாதேவி படத்தில் 6 அடிக்கும் உயரம் கொண்ட அனுஷ்காவுடன் இணைந்து ஒரு பாடலில் நடனம் ஆடியுள்ளேன்.

அந்த பாடலில் அதிக உயரம் கொண்ட ஹீல்ஸ் அணிந்து கொண்டு நடனமாடியுள்ளேன். அப்போது எனது உயரம் ஒரு குறையாக தெரியவில்லை என்று கூறியுள்ளார். அத்தோடு உயரத்தை பேசிய இயக்குனர்களிடம், ருத்ரமாதேவி படத்தை பார்த்துவிட்டு மற்றதை பற்றி முடிவு செய்யலாம் என்று தில்லாக பேசுகிறாராம்.

நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் தமிழ் சினிமாவில் வாய்மை என்ற படத்தில் மிக முக்கிய வேடத்தில் நடித்துள்ளார் கவுண்டமணி. ஆனால் அவரை கதாநாயகனாக வைத்து முழு நீள படத்தை எடுத்த ஆரோக்கிய தாஸ் என்வரின் 49ஓ படம் எப்போது வெளிவரும் என்பதே தெரியவில்லை. இப்படத்தின் முழு படப்பிடிப்பும் முடிவடைந்து மாதக்கணக்கில் ஆகிறது.



# கவிதைப் பூங்கா



**மீண்டும் ஒரு தடவை**

என்ன
திரும்பி வருகிறாய்
உன்னால் முடியாது
என்று
நீ
மீண்டும் ஒருதடவை
சுனாமி வேகத்தில்
திரும்பு

தன்னால்
முடியாது என்றால்
கவியரசாய்
வந்திருக்கமாட்டான்
கண்ணதாசன்

அவன்
மட்டும் அல்ல
கவிப்பேரரசு வைரமுத்துவும்
தான்

மூன்று
முறை விழுந்துதானே
மீண்டும்
எழுந்து
உலகை
மாத்திரம் அல்ல
மரணத்தையே ஜெயித்தார்
யேசுபிரான்

உனக்கு முன்னால்
தடைகள் எழுகின்ற
போது
நீ
பயத்துக்கு
மரணதண்டனை
கொடு

பல
பேரின் இலட்சியங்கள்
முடிந்திருக்கிறது
பாதிவழியில்

காரணம்
பயம் துணிவை
கட்டிப்போட்டதால்
தான்

என்ன
திரும்பி வருகிறாய்
உன்னால் முடியாது
என்று
நீ
மீண்டும் ஒரு தடவை
சுனாமி வேகத்தில்
திரும்பு

உயிரோவியன்



**"விலைமாதுவின் விந்தை"**

மண்ணில் பெண்ணா பிறந்து விட்டேன்
மாசற வாழும் வழி மறந்து விட்டேன்
மண நாள் கண்டு பிரிந்து விட்டேன்
மஞ்சம் கொண்டே வாழ்ந்து விட்டேன்

ஒவ்வொரு நாளும் மணநாள் எனக்கு
ஒரு மணி நேரம் அது என் வழக்கு
ஒத்திகை பார்ப்பவர் எண்ணில்லா கணக்கு
ஒப்புக் கொள்வதில் தவறென்ன இருக்கு

பத்தினி எரிச்சா பச்சை வாழையும் எரியும்
பழமொழி ஒன்று இருக்கு...
பசி வந்தால் பத்தும் பறக்கும் என்ற
பழமொழி எதற்கு...

சித்திரம் என்பது
சுவர்களில் தானே இருக்கு
சேலை விலகிடும் போது
சுவாமியும் ஆவான் கிறுக்கு

கற்பு என்பது கல்வியில் இருக்கு
கற்றவர் கூட கலவில் பிணக்கு
குற்றம் என்பது மனிதனின் கருத்து
கடவுளும் மன்னிப்பான் தவறினை
பொறுத்து...

உயிர் கொடுத்த உத்தமியே
உனையிழந்து வாடுகிறேன்
என் இருவிழிபோல்
என் எழுதுகோலும் அழுகுதம்மா
உன் ஞாபகத்தை எழுதிவிட
தொலைவினிலே மகனிருக்கான்
உன் ஜீவன் நினைத்திருக்கும்
இறைவன் உனை அழைத்ததன்று
என் இதயம் இங்கே வெடித்ததம்மா
கருவறையில் சுமந்தவளே
கவலை என்னை விரட்டுதம்மா
கபனிடுமுன் பார்க்கலன்னு
என் கண்களுக்கு கொடுப்பனல்ல
கண்ணீரும் வெறுக்குதம்மா
கடன் காரன் உன் பிள்ளையென
பெத்த மனம் பித்து
பிள்ளை மனம் கல்லு
என் கதையில் உண்மையென
கவிதையில எழுதிடவா
பெத்த கடன் தீர்க்கலன்னு
உன் கவலை எனக்கிருந்து
கனவினிலும் அழுகிறம்மா
கண்ணீரும் கதை சொல்லி
தலையணையும் அழுகுதம்மா
மறுபடியும் நானே
உன் மகனா பிறக்கனும்மா
மகத்தான வாழ்வு பெற
தினம் படைத்தவனை நினைக்கிறம்மா

மௌனமே
உன்னை
கலைத்தது தென்றலா
காற்றையே கைது செய்ய
காதலை தூது விடு
காவலனுனக்கு காதலன் மட்டுமே
மௌனமே
உன்னை
கலைத்தது காதலா
கவலையை தூது விடு
காதலனுனக்கு காத்திருப்பு மட்டுமே
மௌனமே
உன்னை
கலைத்தது காதலனா
கண்ணீரை தூது விடு
கணவனுனக்கு காதலன் மட்டுமே



உறங்கும் நேரத்தில்
உறங்கா நினைவுகள்
சத்தமின்றி யுத்தம் செய்கின்றது
கனவுகளாக
கண்களும் களமிறங்கிறது
கவிதையெழுத
கண்மணி மறந்துவிடாதே
என் காதலை தொழுக
கனவுகளும் உலவுகிறது
உன்னை நெருங்க
கவலையை தந்துவிடாதே
நான் கண்ணீரை தழுவ...

வெள்ளாமை கெட்டு
வெதையாகிபோயிருச்சு...
வேண்டிவச்ச சாமியெல்லாம்
சிலையாக ஆகிருச்சு
காஞ்ச உப்பில்
கலந்துவச்ச
ஆகார கனவும்
அயோடின் கரைசலும்
கலஞ்சேருமுன்னாடி
காணாம போயிருச்சே...
கல்லாகும் நேரத்தில்
பாழானதென்பாடு...
பேஞ்சுகெடுத்த கோடைமழை
பிரிச்சுத்தருமா
என் வேர்வையை...

சிதைந்த
கூரைவழியே
சௌகர்யமாய்
புகுந்தது...
என்
படுக்கையறைக்குள்
பௌர்ணமி நிலா..!


முன்னங்கால் ரெண்டும்
முறிஞ்சுபோன குதிரையைத்தான்
இன்னமும்
ஒட்டிக்கொன்டிருக்கிறார்
எங்க ஊரு
ஐயனார்...!

விரும்புகிறேன் என்று சொல்லி
எறும்பு போல என் பின்னால்
வந்தான்
அவன் குறும்புகளில்
காதல் அனலாய் மாறி
ஆலையிட்ட கரும்பாயானேன்
காதலிச்சா கூட காசு பணம் தேவை
பேதலிச்ச நெஞ்சம் தேடுகிறது சாவ
ஆதரிச்சி வாழ யாருமில்லா பாவை
சேகரிச்சி வைத்தேன் மனசு பூரா நோவ
மாலை கட்டி வாழ ஏழையெ காட்டி
பாதகத்தி என் வாழ்வு படையில போச்சி
வாழ வழியற்று போச்சி
வாயக்கரிசி தேடலாச்சி
வாழா வெட்டியானேன் காதலே சாட்சி
மூதேவிக்கு வாழ்வு மூலையிலேயென
மூளைகெட்ட மூதை
முடக்கி விட்டால் திண்ணையிலே
கேடு கெட்ட லவ்வ வேறுக் கொல்லு
சேலை கட்டி தொங்கி செத்து விட கூடா
வேறொருத்தன் உன்ன
தாலி கட்டி கொள்வான்
ஆணையிட்ட அன்னை
அவனுடன் வாழ விடவில்லை
என்னை

சித்திரமே
விழியால் சிறையெடுத்து
இமையை வழி நிறுத்தி
உன் உருவம் நிலைத்திருக்க
நித்திரையை தினம்
இழக்கின்றேன்
இரவும் பகலாய் மாறி
நிலவும் என்னை சுடுகிறது
உன் நினைவைச் சொல்லி
சந்திக்க சிரமம் கொண்டு
சொல்லிக்க நாவிழந்து
சிந்திக்க நான் மறந்தேன்
தினமும் ஒரு பொழுது



# புனைகதைப் புயல்



தொடர் - 89

வேகமாக சென்ற அம்மா கடையின் மேசை லாச்சியை திறந்து எதையோ தேடினாள். கடைக்குள் நின்ற வதனாவுக்கு எதுவுமே புரியாது அம்மாவையே பார்த்துக்கொண்டு நின்றாள். வெளியில் இருந்த ராம்குமாருக்கோ, அப்பாவிற்கோ எதுவும் தெரியாது. கவலை மிகுதியால் உள்ளே போய் அழப்போகிறாள் என நினைத்தனர். சுரேனும் அப்படி எண்ணி....



# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி

"அம்மா போறா நான் வந்து குழப்பீட்டன் போல..."

"அது பிரச்சினையில்லை அம்மா... அவாக்கு மட்டும் தான் தெரியாது."

"இப்ப திடீரென சொன்னது ஏதாவது பிரச்சினையாகிடுமோ.... தெரியேல்லை..."

"இல்லை இண்டைக்கு எப்பிடியும் சொல்லுறண்டு தான் இருந்தனாங்கள் என்னும் எவ்வளவு காலத்துக்கு மறைக்கிறது...."

"அது... எனக்கு விசயம் தெரியாது அதுதான் சொல்லி விட்டுட்டன்."

"அது பிரச்சினையில்லை...."
"ராம்... அம்மா உள்ள போனா போய் பாரன்."

சுரேன் அம்மா கவலையுடன் போய் விபரீதமாக ஏதாவது நடந்துவிட்டால் தன் மீது பழி வந்து விடும் என்ற பயத்தில் ராமை அவசரப்படுத்தினான். ராமும் உள்ளே போனான். அங்கு தர்சாவும் வதனாவும் பார்த்துக்கொண்டு நிற்க அம்மா கடை மேசையின் லாச்சிக்குள் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

"என்னம்மா தேடுறீங்க..."

அவன் கேட்கவும் அவள் எடுக்கவும் சரியாக இருந்தது.
"இதைத்தான் தேடினனான்......"

மாபிள் தாளினால் சுற்றப்பட்டிருந்த ஏதோ ஒன்றை கையிலெடுத்துக்காட்டினார். அது என்ன என்பது ராமுக்கு மட்டும்தான் தெரியும். இதற்கிடையில் வெளியில் இருந்த அப்பாவும் சுரேனும் உள்ளே நுழைந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அம்மா கையில் வைத்திருக்கும் செவ்வகவடிவமான பொருள் என்ன என்ற வினா இருந்தது; அதை அறியும் ஆவல் மிதமாக இருந்தது. அம்மா அந்த மாபிள் பேப்பரை கிளிக்கத்தொடங்கினாள்.
எல்லோரும் 'அது என்ன பொருள், அதுவும் தான் தினமும் பயன்படுத்திய லாச்சியில் இருந்திருக்கிறதே... எனக்குத்தெரியாமல்.." என்று ஆச்சரியப்பட்டாள் வதனா. தர்சாவுக்கும் அப்படித்தான்... அப்பாவுக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது. அதுவும் திருமணம் செய்து இத்தனை வருடமாக அவள் தனக்கு என ஒரு நூறுருபா கூட எடுத்து ஒழித்து வையாதவள் இவ்வளவு பெரிதாக என்ன வைத்திருக்கிறாள் பார்ப்போம் என எண்ணினார். ஆனால் ராமோ..... பீதியுடன் பதட்டப்பட்டு...

"அம்மா வேண்டாம் அது என்ரை அது வேண்டாம்..."

அவன் அப்படிக்கூறிய போது விரக்திச் சிரிப்போடு...

"அது உன்ரையில்லை என்ரை...."

என்றபடி கவறைப்பிரித்தாள். அது ஒரு 'டியூரோப்பிறேம்' அதனைப்பார்த்ததும் ஆச்சரியப்பட்டனர். அம்மா தனியாக வெளியில் போவது கூட இல்லை. அப்படியிருக்கும்போது இது எப்படி அம்மாவுக்கு என மற்றவர்கள் யோசித்தனர். ஆனால் ராமோ...

"அம்மா... வேண்டாம்... வேண்டாம்"
என்று கூறியபடி அந்த பிறேமை பிடிக்க முற்பட்டான்.
"இல்லை விடு...."

என்று பிறேம் மீது முகம் புதைத்து
"என்ரை செல்லம்..."

என்று விம்ம ஆரம்பித்தாள். அப்போது தான் அப்பாவுக்கு விடயம் புரிய ஆரம்பித்தது. இது ரவியின் படமாகத்தான் இருக்கும் என்று ஊகித்துக்கொண்டவர், அவனில்லை என்று ஆரம்பத்தில் தெரிந்து கொண்டபோது கூட அழுது புலம்பாது மனதை அடக்கிக்கொண்டிருந்தவரால் அவனது புகைப்படத்தை பார்க்கும் மனதிடமில்லாததால் மறுபக்கம் திரும்பிக்கொண்டார். அம்மாவின் விம்மல் அழுகையாக உருவெடுத்து சில நொடிகளில் தணிந்து கொண்டது.

'நல்ல வேளையாக பெரிதாக ஒன்றும் ஆகவில்லை' என்று மன ஆறுதலடைந்த ராம் அம்மாவையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அழும்போது அம்மா தரையில் உட்கார்ந்திருந்ததால் அவனும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவனை பார்த்து...

"என்னடா அம்மாவுக்கு இது எப்பிடித்தெரியும் எண்டு பாக்கிறியே..."

அவன் அமைதியாக அம்மாவையே பார்த்தான். அவனால் எதுவும் பேசமுடியவில்லை. அவளே தொடர்ந்தாள்...

"எனக்கு இது எப்பவோ தெரியும்......"

சொல்லிவிட்டு சிரித்தாள். அந்த விரக்திச்சிரிப்பில் அவளைப்பார்க்க அவனுக்கு பயமாக இருந்தது. 'ஐயோ அம்மாவுக்கு ஏதோ ஆகீட்டுதோ... கடவுளே இப்ப என்ன செய்யிறது' என்று யோசித்தான். அதற்கிடையில் அம்மா தன் கையிலிருந்த படத்தை திருப்பிக்காட்டி...

"என்ரை பிள்ளைய பாருங்க அவன் சிரிச்சிட்டிருக்கான்.... பார்..."

அதைப்பார்த்ததும் தர்சாவுக்கும் வதனாவுக்கும் 'பக்'கென்றிருந்தது. மலர் அலங்காரத்தின் நடுவே ரவி சிரித்துக்கொண்டிருந்தான். மேலேயும் கீழேயும் விபரங்கள் எழுதப்பட்டிருந்தன. அதையெல்லாம் வாசிக்குமளவு மனநிலையிருக்கவில்லை.
"ஐயோ அண்ணா...."

தர்சா தன்னைமறந்து அழ ஆரம்பித்தாள். வதனாவுக்கு அவனின் முடிவு பற்றி ஏற்கனவே தெரிந்து அழுது அழுது களைத்து மனமாறிவிட்டபோதும் படத்தில் பார்த்தவுடன் தாங்கமுடியவில்லை. தேம்பியழத்தொடங்கிவிட்டாள். வழமையாக தனித்தனியே தான் அழுவார்கள். இன்றுதான் அவனுக்காக எல்லோரும் ஒன்றாக அழுகிறார்கள். அம்மா வைத்த ஒப்பாரிச்சத்தம் கேட்டு அயலவர்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் என்னவோ ஏதோ என்று புரியாமல் தான் ஓடிவந்தார்கள். ஏதோ விபத்து நேர்ந்து விட்டதாகத்தான் பலர் நினைத்தார்கள். வந்தபோது செல்லம்மா ரவியின் படத்தோடு இருப்பதைக்கண்டவுடன் அவர்களுக்கு விடயம் புரிந்துவிட்டது. அயல்வீட்டுப்பெண்களும் அருகில் அமர்ந்து கொண்டு அழ ஆரம்பித்து விட்டனர்.

இடப்பெயர் காலத்தில் போர் ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருத்தரையாவது காவுகொண்டிருந்தது. அதனால் எல்லோரிடமும் அடக்கமுடியாக கவலைகள் மனதில் நிறைந்திருந்தன. அவர்கள் சும்மாவே அவ்வப்போது தனிமையில் அழுது கரைந்து கொண்டிருப்பவர்களுக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்தால் விடுவார்களா. எல்லோருமே தம் கவலைகள் தீர குரலெடுத்து ஒப்பாரிவைக்க ஆரம்பித்தனர்.

"அம்மா அழாதையுங்கோ... அம்மா அழாதையுங்கோ..."

ஓரிரு தடவை சொல்லிப்பார்த்தான் நிறுத்துவதாக இல்லை. அவனுக்கும் அழுகைவந்து விடும்போல இருந்தது. அழுதால் கவலைதீரும்என்றுசொல்லக் கேள்விப்பட்டிருந்தான். இதனால் தடுக்காது அமைதியாக இருந்தான். சிறிது நேரத்தில் அழுகை ஓய்ந்தது. அம்மா ரவியின் படத்தைக்காட்டி அவனின் முடிவு பற்றிய தகவல்களை கூறத்தொடங்கினார். இன்று சுரேன் உறுதிபடக்கூறியதையும் அடிக்கடி நினைவுபடுத்தினார். அங்கு வந்திருந்த பெரியவர்களில் ஒருவர்,

"தம்பி அண்ணாவுக்குரிய கடமையள செய்து விடவேணும். இப்ப முடிவாய் தெரிஞ்சிட்டுது தானே ஏன் விடுவான் அவன்ர ஆத்மா சாந்தியடைய செய்யவேண்டியதை செய்து விடவேணும்."

அவரது கருத்துக்கு தலையசைத்த கணபதிப்பிள்ளையார்...

"கோயிலையாட்டை என்ன செய்யவேணுமெண்டு கேட்டு அப்பிடியே செய்வம்."

அதற்கும் தலையசைத்தான். அதற்கிடையில் அங்கு நின்ற ஒருவர்,
"தம்பி முந்தி படம் தாற நேரத்தில அது எவ்வளது காலத்துக்கு பிறகெண்டாலும் படத்துக்கு விளக்கு வைச்சு பூமாலையள் போட்டு செய்யிற நாங்கள் தானே. அதமாதிரி இப்ப ரவீன்ர படத்தை ஒரு கதிரையில வைச்சு விளக்கொண்டை கொழுத்திவிடுவம்."

அதை ஏற்றுக்கொண்டவன் உடனே செயற்பட ஆரம்பித்தான். வீட்டினுள்ளிருந்து ஒரு குத்து விளக்கை எடுத்துகொண்டு வந்தான். அம்மாவிடமிருந்து படத்தை வாங்கி ஒரு கதிரையில் வேட்டி ஒன்றை விரித்துவிட்டு சாத்திவைத்தான். பக்கத்து வீட்டு அன்ரி எண்ணை, திரி, ஊதுபத்தி எல்லாம் கடைக்குள்ளிருந்து எடுத்து வந்தார். விளக்கை வைத்து ஏற்றும்படி கூறினார். அம்மாவே விளக்கை ஏற்றினார். யாரோ ஒருவர் கைநிறைய பூக்களுடன் வந்தார், முதலில் பூவை வைக்கும்படி வதனாவை கட்டாயப்படுத்தினர். அவள் மறுத்தாள். இறுதியில் அழுகையுடன் தனக்கு மாலை சூடியவனுக்கு பூவைத்தாள். பின்னர் ராம்குமார் கோயில் ஐயாவிடம் அண்ணனுக்குரிய கடமைகளை எவ்வாறு செய்யவேண்டும் என கேட்டான்.

"திகதி சரியாய் தெரியுமா? சொல்லு தம்பி,"
"பதினேழு அஞ்சு... ரண்டாயிரத்து ஒன்பது...."

"அ.....சனிக்கிழமை...அ...ஆ.... சப்தமித்திதி தம்பி... அப்ப எப்ப தெரியும்..."

"இண்டைக்குத்தான் அம்மாக்கு சொன்னதையா...."

"ஆ..அப்ப திதியை பாத்து... ஆத்திலை அந்திரட்டியை செய்து திவசம் செய்யலாம்... வாற இருபத்தைஞ்சாம் திகதி திதி வருகுது. அதுக்கு முதல் எல்லாத்தையும் முடிச்சு அண்டைக்கு வடிவாய் திவசத்தை செய்யலாம்... ஆத்மா சாந்தியடைய காரியங்களை திருப்தியாய் செய்யுங்கோ."

"ஓமையா..."

போனைகட்செய்துவிட்டுத்திரும்பியவன் அதிர்ந்து போனான்.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## சுவாமி விவேகானந்திரன் சிந்தனைகள்

வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக்கூடாது.

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன்.

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக்கொள்வது மிகப் பெரிய பாவம்.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாகவும், முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைத் தூதராகவும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன் என்று கூறுபவருக்கு சொர்க்கம் கடமையாகிவிட்டது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஸயீத் அல்குத்ரீ -ரலி, நூல் : அபூதாவூத் 1306)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதரே! நல்லறங்கள் புரியும் ஒருவரை அவரின் நல்லறங்களுக்காக ஒருவர் நேசிக்கிறார், ஆனால் நேசிப்பவரோ அவரைப் போன்று நல்லறங்கள் புரியவில்லை, இவரைப் பற்றிக் கூறுங்களேன்! என்று நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் மனிதன் அவன் யாரை நேசிக்கின்றானோ அவருடன் (மறுமையில்) இருப்பான் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட நபித்தோழர்கள் இதற்கு முன்னர் வேறு எதற்கும் மகிழ்ச்சியடைந்து நான் கண்டிடாத அளவுக்கு மகிழ்ந்தனர். (அறிவிப்பவர்: அனஸ் (ரலி) அவர்கள், நூல்: அபூதாவூத் 4462)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரன் ஆவான். அவனுக்கு அநியாயும் செய்யக் கூடாது. காட்டிக் கொடுக்கக் கூடாது. யார் தன் சகோதரனின் தேவையை நிறைவேற்றுகிறாரோ அவரது தேவையை அல்லாஹ் நிறைவேற்றுகிறான். யார் ஒரு முஸ்லிமின் நெருக்கடியை அகற்றுகிறாரோ கியாமத் நாளின் நெருக்கடிகளில் ஒரு நெருக்கடியை அவரை விட்டும் அல்லாஹ் அகற்றுகிறான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ அவரது குறையை அல்லாஹ் மறைக்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், நூல்: புகாரீ 2262, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வைத்திருப்பவரும் கொல்லனின் உலையுமாகும்! கஸ்தூரி வைத்திருப்பவரிடமிருந்து உமக்கு ஏதும் கிடைக்காமல் போகாது! நீர் அதை விலைக்கு வாங்கலாம் அல்லது அதன் நறுமணத்தையாவது பெற்றுக்கொள்ளலாம்! கொல்லனின் உலை உமது வீட்டையோ உமது ஆடையையோ எரித்து விடும் அல்லது அவனிடமிருந்து கெட்ட வாடையை நீர் பெற்றுக்கொள்வீர்! அறிவிப்பவர் : அபூமூஸா (ரலி) நூல் : புகாரி (2101)

## ஜோன் கெரியின் இலங்கைப் பயணமும், வெளிவராத உண்மைகளும்...

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

இலட்சம் லட்சமாக மக்கள் கொல்லப்பட்டனர். சர்வாதிகளையும், கொடுங்கோலர்களையும் வளர்த்து ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிற்று. இனிமேல் ஆசியாவில் தாம் கவனம் செலுத்த வேண்டும் என ஆசிய பசிபிக் கட்டளை என்ற கடற்படைப்பிரிவை ஆரம்பித்து ஆசியக் கடற்பிராந்தியத்தை இராணுவமயப்படுத்திற்று. வன்னிப் படுகொலைகளின் பின்னணியில் செயற்பட்டு தெற்காசியாவில் மனிதப்பலிகளை ஆரம்பித்து வைத்தது. உலகத்தில் குற்றச்செயல்கள் மிகக்குறைவாகக் நடைபெறும் நாடுகளில் ஒன்றான மாலைதீவில் இந்தியாவுடன் இணைந்து சதிப்புரட்சியை ஆரம்பித்து வைத்தது. இந்தியாவில் ஒரு புறத்தில் இந்து பாசிசத்தையும் மறு புறத்தில் இஸ்லாமியத் தீவிரவாதத்தையும் உருவாக்கத் துணை போயிற்று. இலங்கையில் அமெரிக்காவின் அனுசரணையுடன் கொலைகளுக்காக வளர்க்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை ஆட்சியிலிருந்து அகற்றிவிடு தனது பொம்மைகளை ஆட்சியிலமர்த்த ஜோன் கெரி நேரடியாகவே தலையிட்டார்.

சர்வாதிகாரி மகிந்த ஆட்சியிலிருந்து விலக மறுத்த போது கெரி தொலைபேசியில் மகிந்தவை மிரட்டினார் என்ற செய்திகள் வெளியாகின. உலகத்தின் தெற்காசிய மூலையின் கண்ணீர் போலக் காட்சி தரும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் திடீர்ப் பயணம் செய்வது என்பது அமெரிக்க அரசின் நேரடித் தலையீட்டின் முன்னறிவிப்பாகும். அழிவிற்கான முன்னெச்சரிக்கையாகும்.

**தொடரும்...**

## உன்னதப்பாட்டு

என் பிரியமே நீ பூரண ரூபவதி. உன்னில் பழுதொன்றுமில்லை.

லீபனோனிலிருந்து என்னோடே வா. என் மணவாளியே லீபனோனிலிருந்து என்னோடே வா. அமனாவின் கொடுமுடியிலிருந்தும் சேனீர் எர்மோனின் கொடுமுடியிலிருந்தும் சிங்கங்களின் தாபரங்களிலிருந்தும் சிவிங்கிகளின் மலைகளிலிருந்தும் கீழே பார்.

என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய். என் சகோதரியே என் மணவாளியே உன் கண்களிலொன்றினாலும் உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பணியினாலும் என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்.

உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. என் சகோதரியே. என் மணவாளியே. திராட்சரசத்தைப்பார்க்கிலும் உன் நேசம் எவ்வளவு மதுரமாயிருக்கிறது. சகல கந்தவர்க்கங்களைப்பார்க்கிலும் உன் பரிமள தைலங்கள் எவ்வளவு வாசனையாயிருக்கிறது.

என் மணவாளியே. உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது. உன் நாவின்கீழ் தேனும் பாலும் இருக்கிறது. உன் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக்கொப்பாயிருக்கிறது.

என் சகோதரியே. என் மணவாளியே நீ அடைக்கப்பட்ட தோட்டமும் மறைவு கட்டப்பட்ட நீரூற்றும் முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்.

நளதமும், குங்குமமும், வசம்பும், வலங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும், வெள்ளைப் போளச்செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்கச்செடிகளுமுள்ள சிங்கார வனமாயிருக்கிறது.

## இனப்படுகொலை என்ற வார்த்தையினை உச்சரிக்க தமிழர்தரப்பு தயங்குவது ஏன்?

தொடர்ச்சி..

இந்த நாடு எங்களுக்கு அளித்த உதவி, இன்னல்களையும், அநீதிகளையும் மலைபோல் எங்கள் மீது சுமத்தியதே ஆகும். யுகயுகமாகக் காலால் மிதித்து நசுக்கப்பட்ட, எம் மக்களுக்கு மனித உரிமைகளுக்காக நாம் செய்யும் முயற்சிகளின் காரணமாக இந்தநாட்டுக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடாது.' எனவே இந்த இன அழிப்பு என்ற வார்தையினை நாம் பிரயோகிப்பதால் இலங்கைத்தீவு கடலில் மூழ்கிவிடப்போவதில்லை அதற்காக எம்மை பயங்கரவாதிகள் என்றோ தேசத்துரோகிகள் என்றோ கூறினாலும் கவலையில்லை.

ரி.ரி.என் செய்தித்தளத்திற்காக
தாயகத்திலிருந்து கதிரவன்.

07ஆம் பக்கத்தொடர்ச்சி...

தெரிந்துகொள்ளவேண்டியதில்லை.

உண்மையில் வாழ்வுரிமைக்காக ஆயுத போராட்ட வழிமுறையை தேர்ந்தெடுத்த கட்சிகள் எவையாயினும் இதைத்தான் செய்யும். நிச்சயம்செய்யவும் வேண்டும். ஆனால் இவர்கள் ஆயுத போராட்ட இயக்கங்களின் தலைவர்கள் தானா? என்று சந்தேகம் எழுப்பும் அளவுக்குகூட்டமைப்புக்குள் உறுப்புரிமை வகிக்கும் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரது செயற்பாடுகள் உள்ளமை, அது இவ்விரண்டு கட்சிகளையும் நம்பி வாக்களித்த மக்களுக்குக்கூடவாவது நன்மை பயக்காது.

எத்தகையமறுப்புமின்றி–எதிர்ப்புமின்றி, இலங்கை தமிழரசுக்கட்சியின் சர்வாதிகாரத்தனத்தோடு இவர்கள் இசைந்து குலைந்து மசிந்து போவதானது, 'நீளக்கால்சட்டையிலிருந்து எங்களை வேஷ்டிக்கு மாற்றிவிட்டீர்கள். இப்போது நாங்கள் உடுத்தியிருக்கும் வேஷ்டியை வேண்டுமானாலும் உருவி எடுத்துக்கொள்ளுங்கள். ஏன் உங்களை பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரைக்கும் வேண்டுமானாலும் முதுகில் சவாரி ஏற்றிக்கொண்டு போகின்றோம். ஆனால் தேர்தல் என்று வரும்போது ஆசன ஒதுக்கீட்டை மட்டும் தயவுபண்ணி தந்துவிடுங்கள்' என்று இலங்கை தமிழரசுக்கட்சியிடம் இரந்து கேட்பது போன்றதான அருவருப்பான–அசிங்கமான தோற்றப்பாட்டையே தருகின்றது.


இலங்கை தமிழரசுக்கட்சியினர் குட்டக்குட்ட இவர்கள் குனிந்துகொண்டே இருப்பது அன்றி, ஒப்புக்கு அண்ணன் தம்பி உறவுச்சண்டை போல எதிர்ப்பை வெளிப்படுத்துவதும் பின்னர் கூடிக்குலாவி கலந்திருப்பதும் தமிழ் இனத்துக்கும், தமிழ்த்தேசிய அரசியலுக்கும் ஆரோக்கியமானதாகாது. விடுதலை நோக்கிய அரசியல் பயணத்துக்கு உகந்ததுமல்ல. 'தமிழ்த்தேசியம், தனித்தமிழ் தாயகம், சுயாட்சி' இக்கோட்பாடுகளை குப்பைத்தொட்டிக்குள் கடாசி வீசியிருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் தயவை உதறித்தள்ளிவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் இந்த மூன்று கட்சிகளும் தன்முனைப்பு உந்துதலோடு, அதாவது 'போராளிகளுக்கே உரித்தான மிடுக்கோடு' புறப்பட்டு வருவார்களாயின் மட்டுமே 'தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு' உருப்படும். நிலைபெறும்!

அதே 'தமிழ்த்தேசியம், தனித்தமிழ் தாயகம், சுயாட்சி'யை கோரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் இவர்களோடு இணைந்து கொள்வார்களாயின் இன்னும் கூடுதல் பலம்பெற்று தமிழ் மக்களுக்கு கனதியான–காத்திரமான அரசியல் தலைமைத்துவத்தை கொடுக்க முடியும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அரசியல் இருப்பானது சாத்தியப்படல் வேண்டுமாயின், 'தன்முனைப்பு உந்துதலிலேயே' அது தங்கியுள்ளது. மெய்யாகவே போராளி இயக்கங்களை சேர்ந்தவர்களாயின் அவசியம் 'தன்முனைப்பு உந்துதல்' என்பது இவர்களுக்கு உள்ளூர இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் இவர்களில் எங்கோ பழுதுகளும் குறைபாடுகளும் உண்டு என்றே அர்த்தப்படும். எல்லா ஆயுதங்களும்தீர்ந்த/செயலிழந்த பின்னர் கர்ணனின் இறுதித்தாக்குதல் ஆயுதம் 'நாகாஸ்திரம்' போன்று 'தன்முனைப்பு உந்துதலை' சுரேஸ், செல்வம், சித்தார்த்தன் பயன்படுத்த வேண்டும்.


அவ்வாறு பயன்படுத்திவிட்டால் போதும், இன்றுமூக்கணாங்கயிறு அறுத்த முரட்டுக்காளையாக கட்டுப்பாடுகளற்று வரம்பு பாய்ந்து கொண்டிருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியினர், 'ஐயகோ இது முறையோ? நீங்க கூட்டமைப்பு என்று சொல்லிக்கொண்டு மக்களிடம் போனால், நாங்க என்ன தமிழரசுக்கட்சி என்று சொல்லிக்கொண்டா மக்களிடம் வாக்கு கேட்டுப்போகமுடியும்?' என்று கிலிபிடித்தவாறு இவர்கள் மூவரையும் நோக்கிதிரும்பிஓடிவந்து ஒட்டுண்ணியாய் ஒட்டிக்கொள்ளும் அதிசயம்நிகழ்வதற்கும் வாய்ப்புகள் உண்டு.

தனித்து மேய்ந்து கொண்டிருந்த மந்தைகளைபுலி ஒன்று ஒவ்வொருநாளும் ஒவ்வொன்றாக அடித்துக்கொன்று இரையாக்கி உண்டு வந்ததாம். முடிவில் வலி, இழப்பு, கூட்டுப்பலத்தின் சக்தியை–நன்மையை பட்டுணர்ந்துகொண்ட மந்தைகள் கூட்டமாக சேர்ந்துகொண்டு அதே புலியை அந்த வனத்தை விட்டே ஓட்டி களைத்தனவாம். சிறுவயதில் கற்றுக்கொடுத்த 'கூடி ஒன்றாய் வாழ்ந்து பாரு கோடி நன்மையே, குழப்புகின்ற எவருக்குமே உண்டு அழிவே!' இந்த அநுபவக்கதைக்கு ஒப்ப ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் இந்த மூன்று கட்சிகளும் தமது 'கூட்டுப்பலத்தை' உணராதிருப்பதைப்போன்றதொரு அப்பாவித்தனம்/கோழைத்தனம் வேறொன்றும் இல்லை இந்த உலகத்தில்!


இலங்கை முல்லைத்தீவிலிருந்து...
சுயாதீன இளம் ஊடகவியலாளர்,
-அ.ஈழம் சேகுவேரா-



# அறிவியல் உலகம்



## ஜியோமி விற்பனையை முந்தியது அப்பிள்




சீனாவின் ஸ்மார்ட்போன் சந்தையில் ஜியோமி விற்பனையை அப்பிள் நிறுவனம் முந்தியுள்ளது. சீனாவில் ஸ்மார்ட்போன் விற்பனையில் ஜியோமி நிறுவனம் முன்னணியில் உள்ளது. வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தின்படி ஜியோமி ஸ்மார்ட்போன்கள் விற்பனையை அப்பிள் முதல் முறையாக முந்தியுள்ளது. இந்த புள்ளிவிபரங்கள்படி அப்பிள் நிறுவனம் 2015 ன் முதல் காலாண்டில் சீனாவின் ஸ்மார்ட்போன் சந்தையில் 14.7 சதவீத சந்தையைப் பிடித்துள்ளது. ஜியோமி நிறுவனம் 13.7 சதவீத சந்தையைப் பிடித்து இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

மார்க்கெட் ரிசர்ச்சர்ஸ் இண்டர் நேஷனல் டேட்டா கோர்ப்பரேஷன் (Market Researchrs international data corporation) இந்த புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களுக்கு அடுத்து ஹூவய், சாம்சுங் மற்றும் லெனோவா ஸ்மார்ட்போன்கள் விற்பனையாகின்றன. இதில் ஹூவய் சீனாவைச் சேர்ந்த நிறுவனமாகும். சீனாவின் ஸ்மார்ட்போன் சந்தையின் முதலிடத்தை பிடிக்க உலகின் முன்னணி ஸ்மார்ட்போன் நிறுவனங்களும் போட்டி போடுகின்றன.

கடந்த ஐந்து காலாண்டுகளாக நான்கு நிறுவனங்கள் இந்த இடங்களைத் தக்க வைத்திருந்தன. சாம்சுங் மற்றும் லெனோவா நிறுவனங்கள் இதில் முன்னணியில் இருந்துள்ளன. 2015 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் அப்பிள், ஜியோமி, ஹூவய், சாம்சுங் மற்றும் லெனோவா 57.8 சதவீத சந்தையைப் பிடித்திருந்தன. இதேகாலகட்டத்தில் அப்பிள் ஹூவய், மற்றும் ஜியோமி நிறுவனங்களின் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. சாம்சுங், மற்றும் லெனோவா ஏற்றுமதி குறைந்துள்ளது என்றும் அந்த புள்ளிவிபரம் குறிப்பிட்டுள்ளது.

## உலகை கலக்க வரும் புதிய Animation



Virtual Reality எனப்படும் மாயை உலகிற்கு அழைத்துச் செல்லும் தொழில்நுட்பம் தற்போது வெகுவாக பிரபல்யமாகி வருகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மென்பொருட்கள் மற்றும் சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக இந்த மாதம் Geppetto எனப்படும் புதிய Animation முறைமை ஒன்று அறிமுகம்செய்யப்பட்டுள்ளது. இதில் மவுஸினை அடிப்படையாகக் கொண்டு கட்டுப்படுத்தும் Animation Tool களை நீக்கி, Digital Puppetry எனும் தொழில்நுட்பம் மூலம் Animationகளை உருவாக்கும் வசதி தரப்பட்டுள்ளது.

## செவ்வாய் கிரகத்தில் ஒட்சிசனை உருவாக்கும் நாசா



எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்துக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் பெரிய பெரிய சிலிண்டர்களில் ஒட்சிசனை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. செவ்வாய் கிரகத்திலேயே நுண்ணுயிர்களைக் கொண்டு ஒட்சிசன் உருவாக்கும் திட்டத்தைநாசாதொடங்கியுள்ளது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவைச் சேர்ந்த டெக்ஷாட் என்ற நிறுவனத்துடன் இணைந்துசெவ்வாய் கிரகத்தில் ஒட்சிசன் தயாரிக்கும் ஆராய்ச்சியை மேற்கொள்ள உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் படி, சிலிண்டர்களில் ஒட்சிசனை எடுத்துச் செல்வதற்கு பதிலாக நுண்ணுயிர்களைக் கொண்டு செவ்வாய் கிரகத்திலேயே ஒட்சிசன் உருவாக்கப்படும் என்று டெக்ஷாட் நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி யூஜின் போலந்த் தெரிவித்துள்ளார். செவ்வாய் கிரகத்தில் உள்ள மணலில் நுண்ணுயிர்களைக் கொண்டு சோதனை செய்து, மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான சூழல் அமைப்பை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம். 2030ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## டுவிட்டர், பேஸ்புக்கிற்கு இணையாக மற்றுமொரு சமூகவலைத்தளம்

இன்று மக்கள் மத்தியில் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூகவலைத்தளங்கள் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளன. இவற்றுக்கு நிகராக வேறு சில சமூகவலைத்தளங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் அவை நீண்ட காலம் நிலைத்து நிற்காததுடன், பிரபல்யமடையாமலேயே இருக்கின்றன. இதற்கிடையில் சற்று புதிய சிந்தனையுடன் MakerSpace எனும் புத்தம் புதிய சமூகவலைத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது தமது கலைத்திறன்களையும், புத்தாக்கங்களையும் வெளிக்காட்ட நினைப்பவர்களுக்கு களம் அமைக்கும் தளமாக காணப்படுகின்றது. மேலும் புத்தாக்கங்கள் மற்றும் கலைப் படைப்புக்களை விளம்பரப்படுத்தல் ஊடாக சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுத்தரக்கூடிய இத்தளத்தில் எதிர்வரும் 18ம் திகதி முதல் பயனர்கள் தம்மை பதிவு செய்துகொள்ள முடியும்.

## வேலை செய்யும் வயதினரை அதிகளவில் தாக்கும் பக்கவாதம்

ஸ்ட்ரோக் (Stroke) எனப்படும் பக்கவாத நோயானது வேலை செய்யும் வயதினரை அதிகளவில் தாக்குவதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் 2014ஆம் ஆண்டு இந்நோயினால் பாதிக்கப்பட்ட 6221 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தினர். இவர்கள் அனைவரும் 40 தொடக்கம் 54 வயதிற்கு உட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து கிடைத்த தகவல்களுடன் ஒப்பிடும் போது 1961 அதிகரிப்பை காட்டியதுடன், 14 வயது முன்னராக காணப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் வயதானவர்களை இந்நோய் அதிகளவில் தாக்குவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரோஜாவின் மருத்துவ பலன்கள்




அன்பை பரிமாறவும், அழகுக்காகவும் மட்டுமின்றி மருத்துவத்திலும் சிறந்த பங்காற்றுகிறது காதல் மலர் ரோஜா. ரோஜாப்பூவின் அழகும், மணமும் மக்களை அதுவும் பெண்களை பெரிதும் கவரும். பினைல் எத்தானல், க்ளோரோஜினிக் அமிலம், டான்னின், சையானின், கரோட்டின், சர்க்கரைகள் போன்ற வேதிப்பொருட்கள் ரோஜாமலரில் அடங்கியுள்ளன.

ரோஜா மலரின் இதழ்களை வேளைக்கு ஒரு கைப்பிடி வீதம் வெறுமனே மென்று சாப்பிட்டால் சீதபேதி குணமாகும். ரோஜாப்பூ இதழ்களைதேவையான அளவு சேகரம் செய்து சம அளவு பயத்தம்பயிரை அதனுடன் சேர்த்து 4,5 பூலாங்கிழங்க்கை சேர்த்து அரைத்து விழுதாக எடுத்துக் கொள்ளக்வேண்டும். இதனை தினமும் உடலில் தேய்த்து அரை மணி கழித்து குளித்து வந்தால் சரும நோய்கள் ஒழிந்து உடல் நல்ல நிறம் பெறும். ரோஜா இதழ்களை ஆய்ந்து எடுத்து ஒருகையளவு இதழை ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி, அதில் பாதி கசாயத்தை எடுத்துச் சர்க்கரை சேர்த்துக் காலையிலும், மறுபாதியை மாலையிலும் குடித்து வந்தால் மலச்சிக்கல் விலகும்.

ரோஜா மொட்டுகளில் ஒரு கைப் பிடியளவு ஆய்ந்து வந்து, அம்மியில் வைத்தோ அல்லது மிக்ஸியில் போட்டோ மைபோல அரைத்து, ஒரு டம்ளர் அளவு கெட்டியாக தயிரில் போட்டுக் கலக்கிக் காலை வேளையில் மட்டும் குடித்து விட வேண்டும். ரோஜா பூ லேசான துவர்ப்புச் சுவையுள்ளது. வயிற்றிலுள்ள வாயுக்களை அகற்றி குளிர்ச்சியைத் தரக்கூடியது. இதயத்திற்கு வலுவூட்டும். இதன் இதழ்கள் குளிர்ச்சியை உண்டாக்கும்


## காலநிலையைத் தெரிவிக்கும் மிகச் சிறிய சாதனம் உருவாக்கம்



Mind Lab எனும் நிறுவனம் காலநிலை பற்றிய தகவல்களை அறிவிக்கக்கூடிய உலகின் மிகச்சிறிய சாதனம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. Weather Point எனும் இச்சாதனத்தினை அதிகளவான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் பொருட்டும், 15,000 பவுண்ட்ஸ் நிதியினை ஈட்டும் பொருட்டும் Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வெப்பநிலையை அளவிடும் கருவி, ஈரப்பதனை அளவிடும் கருவி மற்றும் கழி ஊதா கதிர்களின் அளவு என்பவற்றினை அளவிடும் கருவிகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் இச்சாதனத்தினூடாக iOS மற்றும் Android சாதனங்களுக்கு தகவல்களை பரிமாற்றம் செய்யும் வசதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூகுளை அச்சம் அடைய வைத்துள்ள பேஸ்புக்




சமூக வலைதளமான பேஸ்புக் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் தேடல் பொறி செயலியால், அத்துறையில் முன்னணியில் உள்ள கூகுள் நிறுவனம் அச்சம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இணையத்தில் நாம் எதாவது ஒன்றை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் தேடல் பொறி செயலியின் உதவி தேவை. அந்த வகையில் முன்னணியில் இருந்த யாகூ (yahoo) தேடு தளத்தை பின்னுக்கு தள்ளி கூகுள் முதல் இடத்தை பிடித்தது.

இந்நிலையில் பேஸ்புக் புதிய தேடுதல் வசதியை தனது பயனாளர்களுக்கு வழங்குவதால் கூகுள் அச்சம் அடைந்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த சிலரின் பேஸ்புக் பக்கத்தில், அட்-லிங் எனும் புதிய வசதியை பேஸ்புக் நிறுவனம் வழங்கியுள்ளது. இந்த புதிய வசதி மூலம் நீங்கள் விரும்பிய தகவல்களை தெரிந்துகொள்ளலாம்.

அது தொடர்பான இணையதள லிங்குகளும் கிடைக்கும். மேலும் அந்த தகவல்களை நேரடியாக பேஸ்புக்கில் ஸ்டேட்டசாக பகிர்ந்துகொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த துறையில் முன்னணியில் உள்ள கூகுள் நிறுவனம் அச்சத்தில் உள்ளது. மேலும் பேஸ்புக்கின் இந்த புதிய தேடுதல் வசதி உலகம் முழுவதும் பயன்பாட்டிற்கு வந்தால் கூகுலின் விளம்பர வருவாய் கடுமையாக பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இருமல் பிரச்சினையால் அவதியா?


வெண்டைக்காயை அதிகமாக சாப்பிட்டால், எந்த காரியத்தையும் தெளிவாக அணுகும் ஆற்றல் நமக்கு ஏற்படும் என ஆய்வுக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து நிறைந்த, ருசியான காய்களில் முதலிடத்தை வகிப்பது வெண்டைக்காய். வெண்டைக்காயில் அடங்கியுள்ள நீர்ச்சத்து, திரவ இழப்பை தடுத்து உடலை குளுமையாக வைக்கிறது. வெண்டைக்காயில் உயர்தரமான பொஸ்பரசும், நார்ப்பொருளும் உள்ளன. இதில் உள்ள பெகடின் என்ற நார்ப்பொருள் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைக்கும் வேலையை கச்சிதமாக செய்கிறது.

இதயத்துடிப்பை சீராக்கும் மெக்னீசியம் என்ற வேதிப்பொருளும் உள்ளது. இதில் உள்ள நார்ப்பொருள் மலச்சிக்கலை தீர்ப்பதோடு, குடல்புண்ணையும் ஆற்றும். பிஞ்சுகளை நறுக்கிப்போட்டு மோர்க்குழம்பு செய்து சாப்பிட்டால் காய்ச்சல், மலச்சிக்கல் நீங்கும். இதனுடன் சர்க்கரை சேர்த்து சாறு செய்து சாப்பிட்டால், இருமல், நீர்க்கடுப்பு சரியாகும். தோலில் ஏற்படும் வறட்சித்தன்மையை நீக்கும் ஆற்றலும் இதற்கு உண்டு.

படிக்கும் குழந்தைகளுக்கு நாள்தோறும் உணவில் வெண்டைக்காயை பொடியாக நறுக்கி, வதக்கி சாப்பிட வைத்தால் நினைவாற்றல் பெருகும். வேதிச்சத்துக்கள் ரத்தம் உறைதல் மற்றும் ரத்தக்கட்டிகளை தடுக்கும் தன்மை உடையதால் அடிக்கடி உணவுடன் சேர்த்து உட்கொண்டுவர மூளை செயலிழப்பு சார்ந்த நோய்கள் வராமல் தடுக்கலாம்.

# விளையாட்டு உலகம்

## மாரடைப்பு காரணமாக பெல்ஜியம் கால்பந்து வீரர் மரணம்



கால்பந்து போட்டியின் போது ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக, பெல்ஜியம் வீரர் டிம் நிகாட் உயிரிழந்துள்ளார். பெல்ஜியம் கால்பந்து அணியைச் சேர்ந்த 23 வயதான டிம் நிகாட் என்பவரே பரிதா பமாக உயிரிழந்துள்ளார். கடந்த 8ம் ஹெமிக்செம் என்ற இடத்தில் நடந்த உள்ளுர் போட்டியில் வில்ரிஜ்க் அணிக்காக டிம் நிகாட் விளையாடினார். அப்போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக மயங்கி சரிந்தார். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கோமா நிலையில் இருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள்தெரிவிக்கின்றன. இதேவேளை கடந்த மே 1ம் திகதியும் பெல்ஜியம் வீரர் கிரிகரி மார்டென்ஸ், 24, ஜென்க் அணிக்கு எதிராக விளையாடிய போது, மாரடைப்பு காரணமாகமரணம்அடைந்தார். தற்போது மீண்டும் இளம் வீரர் மரணம் அடைந்தது, பெல்ஜியம் கால்பந்து அரங்கில் அதிர்ச்சி ஏற்படுத்தியது.

## சூதாட்டத்தில் 4 சூப்பர் கிங்ஸ் வீரர்கள் – லலித் மோடி




ஐபிஎல் போட்டிகளில் 4 சென்னை வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக முன்னாள் ஐபிஎல் ஆணையர் லலித் மோடி பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார். அவர் ஐபிஎல் ஆணையராக இருந்த போது மிகப் பெரிய அளவில் நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக அவர் மீது புகார் எழுந்தது. இதையடுத்து அவர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு, அவர் மீது சென்னை பொலிசில் பிசிசிஐ சார்பில் ரூ.100 கோடி நிதி முறைகேடு தொடர்பான புகாரும் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தலைமறைவான லலித் மோடி நாட்டை விட்டே ஓடி விட்டார். தற்போது லண்டனில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி பிசிசிஐ மற்றும் ஐசிசி மீது புகார்களைக் கூறி வருகிறார். இந்நிலையில் பிரேக்கிங் ஸ்டோரி என்ற பெயரில் லலித் மோடி சூதாட்டம் தொடர்பாக சரமாரியாக டுவிட்களைப் போட்டு பரபரப்பைக் கிளப்பியுள்ளார்.

அதில் மரியாதைக்குரிய உச்ச நீதிமன்றம், சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரர்களின் பெயர்களை வெளியிடுவதாக இருந்தால் அதில் குறைந்து 4 பேர் சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் இருப்பார்கள் என்று கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில், இந்த சூதாட்டத்தில் ஒரு போட்டிக்கு ரூ.9000 கோடி முதல் ரூ.10,000 கோடி வரை மிக பெரிய அளவில் பணம் புழங்கியுள்ளது. இந்த விவகாரத்தில் ஜோக்கர்களான பிசிசிஐ, ஐசிசி, ஐபிஎல், இந்தியா சிமெண்ட்ஸ், அனுராத் தாக்கூர் ஆகியோர் மக்களை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள். இதுகுறித்து நான் நீண்ட காலமாக சொல்லி வருகிறேன். இனி உண்மையான சாத்தான் யார் என்பதை ஊடகங்கள் உணர வேண்டும் என்று கூறி பரபரப்பை கிளப்பியுள்ளார்.

## 'சூப்பர் மேன்' பிராவோ - வியப்பில் உறைந்த ரசிகர்கள்



ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னையின் சகலதுறை வீரர் பிராவோ களத்தடுப்பில் அசத்தினார். நடந்த ஐபிஎல் ஆட்டத்தில் சென்னை-ராஜஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் நடந்தது. இந்தப் போட்டியில் ஒரு பக்கம் ஜடேஜா சுழலில் அசத்த, மறுபக்கம் பிராவோ சீறி வந்த பந்துகளை பறந்து பறந்து பிடித்து ரசிகர்களை குஷியில் ஆழ்த்தினார். 10வது ஓவரில் ஜடேஜா வீசிய பந்தை ராஜஸ்தான் வீரர் வாட்சன் தூக்கி அடிக்க அது எல்லைக்கோடு அருகே சென்றது.

இதை அந்தரத்தில் பறந்து ஒரே கையால் கேட்ச் செய்த பிராவோ, வழக்கமான 'ஸ்டைலில்' ஆடினார். பின் பால்க்னர் அடித்த பந்தையும் அருமையாக பறந்து பிடித்தார். பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் அணித்தலைவர் விராட் கோஹ்லியை ஓட்ட முறையில் வீழ்த்தி சென்னையின் வெற்றிக்கு உதவிய பிராவோ, நடந்த ஆட்டத்திலும் அசத்தினார். இந்தப்போட்டியில்சென்னை அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

## குவின்டன் டி கொக்குக்கு அபராதம்



நடப்பு ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் நடுவரின் முடிவுக்கு முரணாக செயற்பட்டதாக டெல்லி டேர்டெவில்ஸ் வீரர் குவின்டன் டி கொக்குக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஐபிஎல் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ராயப்பூரில் நடைபெற்ற போட்டியின் போது, நடுவரின் முடிவை ஏற்க மறுத்த டெல்லி அணி வீரர் குவின்டன் டி கொக்குக்கு அவரது ஆட்டக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுகிறது.

டி கொக் ஐபிஎல் நடத்தை விதிகளை மீறியதால் அவருக்கு இந்த அபராதம் விதிக்கப்படுகிறது. இதனை அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கடந்த சனிக்கிழமை இரவு டெல்லி மற்றும் ஹைதராபாத் அணி கள் ராய்ப்பூரில் மோதின. இதில் டி கொக் 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இருப்பினும் அந்த அணி கடைசியில் ஐதராபாத்திடம் தோல்வியைத் தழுவியது.

## எனக்கு ஓய்வு வேண்டும் – கோஹ்லி

வங்கதேச சுற்றுப்பயணத்திற்கான இந்திய அணியில் தன்னை சேர்க்க வேண்டாமென்று விராட் கோஹ்லி தேர்வுக்குழுவுக்கு கடிதம் எழுதியுள்ளார். சந்தீப் பட்டேல் தலைமையிலான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தேர்வுக்குழுவுக்கு கோஹ்லி எழுதியுள்ள கடிதத்தில், இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடர்கள், பின்னர் உலகக்கிண்ணம், தற்போது ஐ.பி.எல். என தொடர்ச்சியாக ஓய்வே இல்லாமல் கிரிக்கெட் விளையாடி வருவதால் தனக்கு ஓய்வு தேவைப்படுவதாகவும், இதன் மூலம் தன்னை புத்துணர்ச்சியுடன் அடுத்த தொடருக்கு தயார் செய்து கொள்ள முடியுமென்றும் கூறியுள்ளார்.

## கெவின் பீட்டர்சனுக்கு அணியில் மீண்டும் வாய்ப்பு



கவுண்டி கிரிக்கெட் போட்டியில் முச்சதம் விளாசியதன் மூலம் கெவின் பீட்டர்சனை இங்கிலாந்து டெஸ்ட் அணிக்கு அவரை மீண்டும் தேர்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 15 மாதங்களாக இங்கிலாந்து தேசிய அணிக்காக தேர்வு செய்யப்படாமல் இருக்கும் கெவின் பீட்டர்சன், தற்போது சர்ரே கவுண்டி அணிக்காக விளையாடி வருகிறார்.

லேசெஸ்டெர்ஷைர் அணிக்கு எதிரான போட்டியில் 326 ரன்கள் குவித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார். ஆஷஸ் டெஸ்ட் தொடர் பற்றிய ஊடக சந்திப்பு நடைபெறவிருக்கும் நிலையில் இச்சாதனையை செய்துள்ளார். இந்த முச்சதம் மூலம் இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணிக்கு திரும்ப வாய்ப்புள்ளதாக பீட்டர்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## தாக்குதல் நடத்திய ரசிகர்கள் – கதறி துடித்த வீரர்கள்



ஆர்ஜென்டினாவில் வீரர்கள் கண்களில் ரசிகர்கள் பெப்பர் ஸ்பிரே அடித்ததால், 4 கால்பந்து வீரர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புகழ்பெற்ற பொம்பரானா ஸ்டேடியத்தில் நடைபெற்ற, கோபா லிப்ரோடர்ஸ் ரவுண்ட் 16 இரண்டாவது லெக் ஆட்டத்தில், போகா ஜூனியர்ஸ்-ரிவர் பிளேட் அணிகள் மோதின.

ஆர்ஜென்டினாவை பொறுத்தவரை போகா ஜூனியர்ஸ்-ரிவர்பிளேட் அணிகள் பரமவிரோதிகள். இந்த போட்டியை காண மைதானத்தில் 50 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர். ரசிகர்களுக்கிடையே மோதல் ஏற்படலாம் என்பதால் மைதானத்தின் உள்ளும் வெளியேயும் ஏராளமான பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் போகா ஜூனியர்ஸ் அணியின் ரசிகர்கள் ரிவர்பிளேட் அணி வீரர்கள் கண்களில் பெப்பர் ஸ்பிரேவை அடித்துள்ளனர்.

ஒரே சமயத்தில் மிகவும் திட்டமிட்டு ரசிகர்கள் எதிர் அணி வீரர்களின் கண்களை குறி வைத்து பெப்பர் ஸ்பிரே தாக்குதல் நடத்தியதால், வீரர்கள் கண் எரிச்சல் தாங்க முடியாமல் கத்தினர். சிலர், "என்னால் பார்க்க முடியவில்லையே... அய்யோ எரியுதே! என எரிச்சலில் துடித்துள்ளனர். இதையடுத்து போட்டி நிறுத்தப்பட்டது. ரிவர்பிளேட் அணி வீரர்கள் லியார்னடோ, லியோனல் வான்ஜியோனி, ரமைரோ ஃபியூனஸ், மேத்தியாஸ் ஆகிய 4 வீரர்களுக்கும் கண்களில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரசிகர்களின் பெப்பர் ஸ்பிரே தாக்குதலையடுத்து இந்த ஆட்டம் ரத்து செய்யப்பட்டது.

## இலங்கை அணிக்கு பயிற்சி அளிக்கும் ஜொன்டி ரோட்ஸ்



தென் ஆப்பிரிக்க அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஜொன்டி ரோட்சிடம் பயிற்சி பெற இலங்கை அணி எதிர்பார்த்துள்ளது. இவர் தற்போது மும்பை இந்தியன்ஸ் அணிக்கு களத்தடுப்பு பயிற்சியாளராக இருக்கிறார். இந்நிலையில் எதிர்வரும் யூனில் இலங்கை வரும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடருக்கு முன்னர் 10 தினங்களுக்கு ரோட்சின் சேவையை பெற இலங்கை கிரிக்கெட் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் கோரிக்கையை ஜொன்டி ரோட்ஸ் ஏற்றுள்ளதாக தெரிய வருகிறது. இது குறித்து நாம் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவை எடுக்க எதிர்பார்த்திருக்கிறோம் என்று இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. இது குறித்த திட்டம் மற்றும் எவ்வாறு பயிற்சி வழங்குவது என்பது பற்றி நாம் அவரிடம் கோரிக்கை விடுத்தோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் களத்தடுப்பின் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி ரோட்ஸ், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வசிம் அக்ரமிடம் பயிற்சி பெற்ற சச்சினின் மகன்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான வசிம் அக்ரம், அர்ஜூன் டெண்டுல்கருக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளார். இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான சச்சினுக்கு அர்ஜூன் என்ற மகன் இருப்பது அனைவரும் அறிந்ததே. தந்தையை போலவே கிரிக்கெட் உலகில் தானும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அர்ஜூன் பயணித்து வருகிறார்.

இந்நிலையில் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான வசிம் அக்ரமிடம் அர்ஜூன் ஆலோசனைகளை பெற்றுள்ளார். இதுகுறித்து வசிம் அக்ரம் நிருபர்களுக்கு கூறுகையில், இளம் வயதுடைய அர்ஜூன் வேகமாக பந்துவீச மிகவும் விரும்புகிறார், மேலும் பல நுட்பங்களையும் கேட்டு அறிந்து கொண்டார். அர்ஜூனிடம் இருக்கும் இந்த ஆர்வம் மிக நல்ல விடயம் என்று வசிம் அக்ரம் தெரிவித்தார்.

# உலகச் செய்திகள்

## பாதுகாப்பு மந்திரிக்கு மரண தண்டனை விதித்த வடகொரிய அதிபர்



வடகொரிய பாதுகாப்பு மந்திரிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வட கொரிய தலைநகர் பியாங்யாங்கில் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி, விமான எதிர்ப்பு துப்பாக்கி மூலம் ஹியோனின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக கொரிய உளவுத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. அங்குள்ள காங் கோன் ராணுவ அகடமியில் நடைபெற்ற இந்நிகழ்வை வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் நேரில் பார்த்ததாக தென் கொரியாவின் தேசிய உளவுத்துறை நிறுவனத்தின் துணை இயக்குனரான ஹான் கி பியோம் கூறியுள்ளார். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் மக்கள் ஆயுத படையின் மந்திரியாக நியமிக்கப்பட்ட ஹியோன், ராணுவ நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அதிபர் கிம் ஜாங் உன்னுக்கு மரியாதை அளிக்கவில்லை என்றும், அதிபரின் கேள்விக்கு முறையான பதில் அளிக்கவில்லை எனவும் கூறி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க ஹெலிகொப்டரை காணவில்லை



நேபாள் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகொப்டரை காணவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. நேபாளில் கடந்த மாதம் 25 திகதி ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை 8,000 ஆக உயர்ந்துள்ளது. அங்கு, மீட்புப் பணியில் பல்வேறு நாட்டு ராணுவத்தினரும் தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றும் அங்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. நேபாளத்தில் செரிகோட் என்ற கிராமத்தின் அருகே மாலை 6 அமெரிக்க வீரர்கள், 2 நேபாள ராணுவத்தினருடன் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் மாயமானது. தற்போது, அந்த விமானம் விபத்துக்குள்ளானதாக அஞ்சப்படுகிறது, மேலும் 8 பேரின் நிலைமையும் தெரியவில்லை "என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஹெலிகொப்டர் பறந்த பகுதியில் இந்திய ராணுவ ஹெலிகொப்டரும் பறந்து கொண்டிருந்தது, இரு ஹெலிகொப்டர்களும் தகவல் பறிமாற்றத்திலும் ஈடுபட்டு வந்தன.

ஆனால், அமெரிக்க ஹெலிகொப்டர் கீழே விழுந்த சத்தமோ அல்லது கீழே விழுந்ததால் ஏற்பட்ட தீ காரணமாக எழும் புகைமூட்டம் ஏதும் காணப்படவில்லை. இதனால் அந்த ஹெலிகாப்டர் பெரிய அளவில் விபத்தை சந்தித்திருக்க வாய்ப்பில்லை என்றும் அமெரிக்க ராணுவம் கருதுகிறது. ஆனால், அந்தப் பகுதியில்பலமணிநேரம்தேடுதல்வேட்டை நடத்தியும் அமெரிக்க ஹெலிகொப்டரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சூப்பர் மார்க்கெட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பிணங்கள்



ஜேர்மனி நாட்டில் உள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டிகளில் பிணங்கள் வைக்கப்பட்டிருந்ததை கண்ட பொலிசார் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஜேர்மனிநாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான பெர்லினிற்கு அருகில் Kloster felde என்ற சிறு நகரம் அமைந்துள்ளது. இந்நகரில் செயற்படாமல் இருந்த சூப்பர் மார்க்கெட் கட்டடத்தில் உள்ள ஒரு தனி அறையை, சவப்பெட்டிகள் உள்ளிட்ட விற்பனைபொருட்களைபாதுகாப்பதற்காக நபர் ஒருவர் வாடகைக்கு எடுத்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வாரம் இந்த அறையை பரிசோதனை செய்த பொது சுகாதார அதிகாரிகள், காலியாக வைக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்ட சவப்பெட்டிகளை திறந்தனர். அப்போது, சுமார் 5 சவப்பெட்டிகளுக்குள் பிணங்கள் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும், பிணங்கள் கெடாமல் இருப்பதற்காக சவப்பெட்டிகளுக்குள் குளிர்சாதன வசதியும் செய்யப் பட்டிருந்தது. பிணங்களை ஆய்வு செய்த Oliver Koehler என்ற அதிகாரி, ஜேர்மனியின் சுகாதார சட்ட விதிகளுக்கு உட்பட்டே பிணங்கள் சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்ததாகவும், அதற்குரிய சரியான ஆவணங்களும் உரிய நபரிடமும் இருந்ததாக தெரிவித்தார்.

இருப்பினும், நகரின் மத்தியில் உள்ள ஒரு கட்டடத்தில் பிணங்களை வைப்பதற்காக உள்ளூர் அதிகாரியிடம் அந்த நபர் முறை யான அனுமதி பெற்றிருக்கிறாரா என சுகாதாரத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். மேலும், பிணங்களை கைப்பற்றிய அதிகாரிகள், அவற்றை முறையாக அடக்கம் செய்ய அப்பகுதி கல்லறைக்கு அனுப்பி வைத்தனர். கடந்த வாரம் நடைபெற்ற இந்த சம்பவத்தை ஜேர்மன் பத்திரிகைகள் வெளியிட்டதால் பெர்லினில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## தாக்கப்பட்ட நபருக்கு 27,000 டொலர்கள் நஷ்ட ஈடு வழங்க உத்தரவு

கனடாவில் காவல்துறை அதிகாரி ஒருவரால் வீதியில் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்ட ஒருவருக்கு27,000டொலர்கள் நஷ்ட ஈடு வழங்குமாறு ஒன்றாரியோ மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.கனடாவில் கடந்த 2011ம் ஆண்டு, ஜன வரி 15ம் திகதி, Mutaz Elmardy என்பவர் ரொறன்றோ நகரத்தில் நடந்து சென்றபோது காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். பின்னர் அவரது கைக்கு விலங்கிட்ட பொலிசார், அவரது முகத்தில் இரண்டு முறை குத்தியதோடு சுமார் 25 நிமிடம் அவரை விலங்கிட்டவாறே படுக்கவைத்திருந்துள்ளனர். இதையடுத்து அந்தச் சம்பவம் தொடர்பாக ரொறன்றோ காவல்துறைச் சபைக்கும், Constable Andrew Pak என்பவருக்கும் எதிராக எல்மார்டி வழக்குப் பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கில் தீர்ப் பளித்த ஒன்றாரியோ மேல் நீதிமன்ற நீதிபதி, அவரைத் தடுத்து நிறுத்துவதற்கோ, சோதனையிடுவதற்கோ காரணம் எதுவும் இருக்கவில்லை. மேலும், காவல்துறை அதிகாரி, சட்டத்தை அவரது கரங்களில் எடுத்துள்ளார் என்று கூறி 27,000 டொலர்கள் நஷ்ட ஈடு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## பிரித்தானிய பொருளாதாரத்திற்கு ஆபத்து - வங்கி ஆளுனர்



பிரித்தானியாவில் அதிகரித்து வரும் வெளிநாட்டு பணியாளர்களின் எண்ணிக்கையால், பொருளாதாரம் சரிவை சந்திக்கும் என இங்கிலாந்து வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது. இங்கிலாந்து வங்கியின் (Bank of England) ஆளுனரான Mark Carney நடத்திய ஆலோசனை கூட்டம் ஒன்றில், பிரித்தானிய நாட்டு குடிமக்களின் ஊதியத்தை உயர்த்த முடியாத நிலைக்கான காரணத்தை விளக்கியுள்ளார். பிரித்தானிய நாட்டிற்கு வந்து பணிபுரியும் வெளிநாட்டு குடிமக்களின் வருடாந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், உள்நாட்டு பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்த முடியாத சூழ்நிலையில் நாடு தவித்து வருகிறது.

இந்நிலை தொடர்ந்து நீடித்தால், பிரித்தானிய பொருளாதாரம் மிக மோசமான சரிவை சந்திக்கும் என அவர் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார். வெளிநாடுகளை சேர்ந்த சுமார் 4.8 மில்லியன் (48 லட்சம்) மக்கள் பிரித்தானியாவில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். அதாவது, பிரித்தானியாவில் பணிபுரியும் சராசரி 6 பணியாளர்களில் ஒருவர் வெளிநாட்டை சேர்ந்தவர் ஆவர். இந்த 4.8 மில்லியன் பணியாளர்களில் 2 மில்லியன் பணியாளர்கள் ஐரோப்பிய ஐக்கிய நாடுகளை சேர்ந்தவர்கள் என ஒரு புள்ளி விபரத்தில் Mark Carney குறிப்பிட்டுள்ளார்.

போலந்து, யுகோஸ்லேவியா, அல்பேனியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு வருபவர்கள் சுமார் 90 லட்சத்து 42 ஆயிரம் வேலை வாய்ப்புகளை பெற்றிருக்கின்றனர். பிரித்தானியாவிற்கு வந்து பணிபுரியும் வெளிநாட்டு நபர்களின் எண்ணிக்கையை கணிசமாக குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் கேமரூன் உறுதியளித்திருந்தார். ஆனால், தேர்தலுக்கு முன் வெளியான புள்ளி விபரத்தில், பிரித்தானியாவில் வருடத்திற்கு 3 லட்சம் வெளிநாட்டினர்கள் அதிகரித்து வருவதாக Mark Carney சுட்டிக்காட்டியுள்ளார். அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு பணியாளர்கள் எளிதாக நியமிக்கப்படுவதால், பிரித்தானிய பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் நிறுவன உரிமையாளர்களுக்கு ஏற்படுவதில்லை.

வெளிநாட்டு பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்தால் தான், உள்நாட்டு பணியாளர்களின் ஊதியத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த காரணத்தை முன்னிறுத்தி தான், பிரித்தானியாவிற்கு வரும் அகதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என ஐரோப்பிய ஐக்கிய சபை சமீபத்தில் வெளியிட்ட திட்டத்திற்கு பிரதமர் கேமரூன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என Mark Carney குறிப்பிட்டுள்ளார்.

## மரணத்தில் இருந்து தப்பி வந்த உயிர் – மரணதண்டனை நிறைவேற்றம்



பாகிஸ்தானில் மரண தண்டனை விதித்து 16 ஆண்டுகளுக்கு பின்னர் கொலை கைதி ஒருவர் தூக்கில் போடப்பட்டுள்ளார். பாகிஸ்தானை சேர்ந்த சவுலத் மிர்சா என்ற நபருக்கு 3 பேரை படுகொலை செய்த வழக்கில், 1999ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அவர் தொடர்ந்து மேல் முறையீடு செய்து வந்தார். அப்பீல் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டாலும், பாகிஸ்தானில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் மரண தண்டனையை நிறைவேற்ற தடை விதிக்கப்பட்டிருந்ததால், அவர் தண்டனை நிறைவேற்றப்படாமல், தப்பி வந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் திகதி பெஷாவர் ராணுவ பள்ளிக்கூடத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி, 132 குழந்தைகள் உட்பட சுமார் 150 பேரை கொன்று குவித்த சம்பவத்தை தொடர்ந்து மரண தண்டனையை நிறைவேற்ற விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து அங்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் தண்டனை நிறைவேற்றப்படுகிறது. இந்நிலையில் மிர்சாவின் தண்டனையை நிறைவேற்ற தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்தது. இதையடுத்து, பலுசிஸ்தான் மாச் சிறையில் அவர் அதிகாலையில் தூக்கில் போடப்பட்டுள்ளார்.

## பெண்ணின் உயிரை பறித்த மது - நிகழ்ச்சியில் நடந்த சம்பவம்



சிங்கப்பூரில் தொலைக்காட்சி தொகுப்பாளர் ஒருவர் மது அருந்தும் போட்டியில் கலந்துகொண்டதில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சிங்கப்பூரில் உள்ள Clarke Quay என்ற நகரத்தில் KTV என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனம் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் கடந்த வாரம் நடந்த சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் விருந்தினர் ஒருவர் வரவழைக்கப்பட்டுள்ளார். அந்த நபர் நிகழ்ச்சி தொகுப்பாளரான 27 வயது பெண்ணிடம் மது அருந்தும் போட்டியை வைத்துள்ளனர்.

போட்டியின் அடிப்படையில், ஒவ்வொரு கிளாஸ் மதுவை அருந்தினால், சிறப்பு விருந்தினர் நிகழ்ச்சி தொகுப்பாளருக்கு 50 சிங்கப்பூர் டொலர் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டது. போட்டி தொடங்கியதும், நிகழ்ச்சி தொகுப்பாளர் ஒவ்வொரு கிளாசாக மதுவை தொடர்ந்து அருந்தியுள்ளார். சிறப்பு விருந்தினரும் 50 டொலராக தொடர்ந்து கொடுத்து வந்துள்ளார். 18வது கிளாஸ் மதுவை அருந்திய நிகழ்ச்சி தொகுப்பாளர், திடீரென மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த பெண்ணிற்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால், பெண்ணின் உடலில் எந்த அசைவுகளும் இல்லாமல், மூச்சு திணறலும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த செவ்வாய் கிழமை பொலிசாரை தொடர்புகொண்ட மருத்துவர்கள், நிகழ்ச்சிதொகுப்பாளர்சிகிச்சைபலனின்றி இறந்துவிட்டதாக தெரிவித்தனர். தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அளவுக்கு அதிகமாக மது அருந்தி நிகழ்ச்சி தொகுப்பாளர் பலியாகியுள்ள சம்பவம் குறித்து சிங்கப்பூர் பொலிசார் விசாரணையை நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

# விந்தை உலகம்

## குழந்தைகளுடன் குப்பை கிடங்கில் வாழும் பெற்றோர்

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் குப்பை கிடங்கில் குடும்பம் நடத்திய தம்பதியை பொலிசார் கைது செய்தனர்.


அமெரிக்காவின் பெரெக்கன்ரிட்ஜ் (Breckenridge) நாட்டில் ஜோ நாக்லெர் (Jo naugler) மற்றும் நிக்கோலி (Nicole) தம்பதி தங்களின் பக்கத்து வீட்டுகாரரை துப்பாக்கி கொண்டு மிரட்டியதாக் பொலிசில் புகார் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக அவர்களை விசாரணை நடத்த வந்த பொலிசார் அதிர்ச்சி அடைந்தனர்.

அவர்கள் தங்களில் 10 குழந்தைகளுடன் அருகிலுள்ள குப்பை கிடங்கில் தற்காலிக குடிசை போட்டு வசித்து வருகின்றனர். மேலும் அவர்கள் தங்கள் குழந்தைகளை சிறு வயது முதல் பள்ளிக்கு அனுப்பாமல் தாங்களே வீட்டில் கல்வி கற்று கொடுத்தும் அவர்கள் விருப்பம் போல் வாழும் விதமாக நாகரிகமற்ற முறையில் வளர்த்து வந்தனர்.

அவர்களை கைது செய்த பொலிசார் சிறையில் அடைத்தனர். குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் பெற்றோர்களே அவர்களுக்கு கல்வி கற்று கொடுத்து அவர்களை பிற மனிதர்கள் தொடர்பில்லாமல் வளர்க்கும் பழக்கம் தற்போது அங்கு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.


© GoFundMe

## உயரமான கட்டடத்தின் உச்சியில் சாதனை படைத்த நபர்



துபாய் நாட்டில் உள்ள உயரமான ஹொட்டல் ஒன்றின் மீது தற்காப்புகலைஞர் ஒருவர் செய்யும் சாகச காட்சிகள் பொதுமக்களை பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளன. சாகச பிரியரான ஓலக் உலகின் பல உயரமான கட்டடத்தின் உச்சியில் இருந்து சாகசம் செய்வதை பொழுதுபோக்காக கொண்டவர்.

தற்போது அவர் துபாயில் உள்ள சோபிடெல் ஹொட்டலின் 43-வது மாடியில் செய்துள்ள சாதனை பொதுமக்களை பிரமிப்படைய செய்துள்ளது. மாடியில் ஒரு தூணில் நின்று கொள்கிறார். கிழே பார்த்தாலே தலை சுற்றும் அந்த உயரத்திலிருந்துகொண்டு ஒரு தூணில் இருந்து மற்றொரு தூணுக்கு அந்தரத்திலேயே தாவுகிறார். மேலும் தனக்கென எந்த பாதுகாப்பு உபகரணங்களையும் பயன்படுத்தாத அவர் ஒரேயொரு கெமராவை மட்டும் கையில் வைத்துகொள்கிறார். அதில் தான் செய்யும் சாகசத்தை பதிவு செய்துகொள்கிறார். இது பற்றி ஓலக் கூறுகையில் எனக்கு உயரங்களை பார்த்தால் பயம் இல்லை உயரமான கட்டடத்தில் இருக்கும் போது காற்றில் பறக்கும் ஒரு பறவையைப் போல என்னை உணர்கிறேன். நான் என் வாழ்க்கையை வாழ்கிறேன், அதைக் கொண்டாடுகிறேன் என்று கூறுகிறார். அவரது இந்த சாகச காட்சி சமூக வலைதளங்களில் அனைவராலும் விரும்பி பார்க்கப்படுகிறது.

## இட்டை குழந்தைகளுக்கு வெவ்வேறு அப்பாக்கள்: வினோத வழக்கு



அமெரிக்காவில் பெண் ஒருவருக்கு பிறந்த இரட்டை குழந்தைகளுக்கு வெவ்வேறு அப்பாக்கள் என டி.என்.ஏ சோதனையின் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் நியூஜெர்சியில் வசிக்கும் பெண் ஒருவருக்கு கடந்த 2013ம் ஆண்டு ஜனவரியில் இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தன.

குழந்தை பிறந்த பின்னர், அப்பெண்ணின் காதலர் அவரைவிட்டு தனியாக பிரிந்து சென்றுவிட்டார். இதனைத் தொடர்ந்து அப்பெண் தன் குழந்தைளை பராமரிக்க காதலரிடமிருந்து ஜீவானம்சம் கோரி, பாசிக் கவுன்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இதுதொடர்பாக நடைபெற்ற விசாரணையில், இரட்டை குழந்தைகளும் காதலருக்கு தான் பிறந்ததா? என்று டி.என்.ஏ பரிசோதனை செய்யப்பட்டதில் அதிர்ச்சியளிக்கும் தகவல் வெளியானது. அதில் ஒரு குழந்தையின் டி.என்.ஏவும், காதலரின் டி.என்.ஏவும் ஒத்துப்போயுள்ளது, மற்றொரு குழந்தையின் டி.என்.ஏ வேறுபட்டிருந்தது. இதுகுறித்து அப்பெண்ணிடம் விசாரணை நடத்தியதில், தன் காதலருடன் உறவு கொண்ட ஒரு வாரத்திற்கு பின்னர் வேறொரு நபருடன் உறவில் ஈடுபட்டேன் என்றும் அந்த நபர் யாரென்று தெரியாது எனவும் கூறியுள்ளார். இந்த வினோத வழக்கில், காதலனுக்கு பிறந்த குழந்தைக்கு மட்டும் ஒரு வாரத்துக்கு பராமரிப்பு செலவு தொகையாக ரூ.2,000 வீதம் வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இது குறித்து மருத்துவர்கள் கூறுகையில், ஆணின் விந்தணுக்கள் ஐந்து நாட்கள் வரை உயிரோட்டத்துடன் இருக்கக்கூடியது. எனவே ஒரு பெண், ஒரு ஆணுடன் நெருக்கமாக இருந்த அடுத்த ஒரு வாரத்தில் மற்றொரு ஆணுடன் சேர்ந்திருந்தால், இரண்டு பேரின் விந்தணுக்கள், இரு வெவ்வேறு கருமுட்டைகளில் சேர்ந்து இரட்டை குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளன என்கின்றனர்.


















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.05.2015 அன்று வெளியிடப்பட்டது.